விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15, வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 13 சனிக்கிழமை (26.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

# தமிழ் பெண்கள் மீது பாலியல் வன்முறை !

## பொறுப்புக்கூற வலியுறுத்துகிறது ஐ.நா.

(கொழும்பு) இறுதிப் போரின் போது தமிழ்ப் பெண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தீவிரமான அவதானத்தை செலுத்தி வருகிறது. இந்த விடயத்தில் இலங்கை தமது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை எதிர்பார்ப்பதாக போரின் போது பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சிறப்பு பிரதிநிதி பங்குரா தெரிவித்துள்ளார்.

போரின் போது பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொடர்பிலான ஏனைய வன்முறைகளை ஆயுதமாகப் பயன்படுத்திய 21 நாடுகள் குறித்து ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையும் இடம் பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் வைத்து வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில்,

20 ஆம் பக்கம் பார்க்க..

## கண்ணிவெடி வெடித்து பணியாளர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக கண்ணிவெடி வெடித்ததில் ஹலோறஸ்ற் நிறுவனப் பணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தைச் சேர்ந்த சிறிகுமார் சிறிநாத் (வயது- 31) என்ற ஹலோறஸ்ற் பணியாளரே இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்

20 ஆம் பக்கம் பார்க்க..

## எதிர்க்கட்சி தலைவராக தவராசா நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக உறுப்பினர் எஸ்.தவராசா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதால் ஜனாதிபதியினால உறுப்பினர் தவராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷியன் கொலை

20 ஆம் பக்கம் பார்க்க..

## அரசிற்கு எதிரானவற்றை தவிர்க்கிறதா கூட்டமைப்பு?


(யாழ்ப்பாணம்)


இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான பிரேரணைகளை கொண்டுவருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் தமது கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண சபைக்கு முதன முறையாக தேர்தல் இடம்பெற்று அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றிபெற்று ஆடசியைக் கைப்பற்றியது. ஆனால் ஆட்சியைக் கைபற்றிய தமிழ்த்

19 ஆம் பக்கம் பார்க்க..

## சாவகச்சேரிக்கு வந்தது யாழ்தேவி





(கொழும்பு)

கொழும்பில் இருந்து பளை வரை சேவையில் ஈடுபட்டுவரும் யாழ்தேவி இம்மாத இறுதிக்குள் சாவகச்சேரி வரை தனது சேவையை தொடரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பளையில் இருந்து புறப்பட்ட யாழ் தேவி நேற்றுக் காலை சாவகச்சேரி புகையிரத நிலையம் வரை தனது பரீட்சார்த்த சேவையில் ஈடுபட்டிருந்தது.

கால் நூற்றாண்டிற்கு பின்பு முதன் முதலில் யாழ்தேவி சாவகச்சேரியை நோக்கி வந்ததை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வியப்புடன் பார்வையிட்டனர். (செ-11)

## ஐ.நா.பாதுகாப்பு சபையிலும் இலங்கைக்கு சீனா ஆதரவு

### மகிந்தவிடம் சீன அமைச்சர் வாக்குறுதி

(ஜெனிவா)

ஐ.நா பாதுகாப்புச் சபையிலும் இலங்கைக்கு சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என அந்நாட்டின் துணை வெளிவிவகார அமைச்சர் லியூ சென்மின் வாக்குறுதி அளித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்து பேசிய போதே இவர் இவ்வாறு உறுதி வழங்கியுள்ளார்.



இதன்போது சீன துணை வெளிவிவகார அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும், பாதுகாப்புச் சபையிலும் இலங்கைக்கு நாங்கள்தொடர்ந்து ஆதரவுவழங்குவோம்.

20 ஆம் பக்கம் பார்க்க..

## ரி.ஐ.டியினரால் யாழில் ஒருவர் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தை மீண்டும் ஒருங்கிணைக்க முயற்சித்ததாகக் கூறி அணமையில் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி, தேவிகன் மற்றும் அப்பன் ஆகியோருடன் தொடர்புகளை பேணினார் எனற சந்தேகத்தின்பேரில் மேலும் ஒருவரை பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்த அருளானந்தன் தினேஷ்குமார் என்பவரே சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள்மீளவும்ஒருங்கிணைவதைதடு

20 ஆம் பக்கம் பார்க்க..

10க்கும் மேற்பட்ட UK, Australia, New Zealand, Canada, Malaysia விசா ஏற்பாடுகள் முழு வெற்றி!

திங்கள் வரையில்

வெறும் 30,000/= மட்டும் முதலில் செலுத்தி UK, Australia, New Zealand, Switzerland & ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு!

கனடாவில் 50க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புக்களுக்கு 25,000 வெற்றிடங்கள்: Express Entry Visa மூலம் துரித விசா சேவை கனேடிய அரசின் CIC Agent மூலம் 100% உத்தரவாதமான சேவை.

(C-7178)

Sikaram Gateway to Education & Employment

Take Off your dreams

மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798

சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி
இல.153, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்ப்பாணம்

## ராஜிவ் கொலை குற்றவாளிகள் வழக்கினை

# அரசியல் சட்ட அமர்வு மூலம் விசாரணை செய்ய உத்தரவு

(டில்லி)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது குறித்த வழக்கை இந்திய உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்ற உச்சநீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருக்கிறது. அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பு வரும் வரை சிறைத்தண்டனை பெற்றவர்கள் விடுதலைக்கு விதிக்கப்பட்ட தடையையும் அது நீட்டித்திருக்கிறது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவரின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து இந்திய உச்சநீதிமன்றம் பெப்ரவரி 18-ம் திகதி தீர்ப்பளித்திருந்தது.

இதனையடுத்து, இந்த மூவரையும் இதே வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி உட்பட வேறு நால்வரையும் உடனடியாக விடுதலை செய்ய தமிழக அரசு முடிவு செய்தது. இந்த முடிவு

20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

கொங்கிறீட் கல் அரியும் இயந்திரம் அச்சுக்கள் 04, அச்சுப் பலகைகள் 500ம் உடன் விற்பளைக்கு உண்டு. — (சி-7172)

0774366704

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டிற்கு அருகில் நி.பர (ஒன்று குளி 04) விஸ்தீரண மான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. — (சி-7172)

தொடர்புகளுக்கு : 0774366704

## விற்பனைக்கு - மோட்டார் சைக்கிள்

NP ML XXXX தொடர் இலக்கமுடைய குறைந்த கிலோமீற்றர் ஓடிய நல்ல நிலையிலுள்ள Hero Honda (CD 100SS) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (6235)

தொடர்புகளுக்கு : 0778417508

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Temple Road (கோவில் வீதி) ஒரு பரப்பு காணியுடன் மாடி வீடு விற்பனைக்கு உண்டு. — (6028)

தொடர்புகட்கு :-0777040378


# மரண அறிவித்தல்கள்

## திருமதி லீலாவதி சிவராஜா



சங்கிலியன் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லீலாவதி சிவராஜா 23.04.2014 புதன்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாமுத்து - மனோன்மணியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவராஜாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமசாமி, பாலசுந்தரம் (பொன்னரியம்) மற்றும் பாலசிங்கம் (கனடா), சிவபாக்கியம் (லங்கா), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமோகன் (V.K. இராஜரட்ணம்), சிவசீலன் (கனடா), சிவஜீவன் (விஷ்ரா விஷன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வினோதினி, மாலதி (கனடா), மாலினி ஆகியோரின் பாசமிகு மாமியும் சிவரஞ்ஜனி, சிவகணேஷ், சிவசங்கர், சிவஜனனி, சிவதாரிணி, நிலூக்கா, வர்வீன், பிரிகேஷ், சிவரதிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவளராணி, செல்வராஜேஸ்வரி (கனடா), லோகேந்திராணி (கனடா), சிவராமலிங்கம், இராமநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15/4 சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
(6226)

## கந்தையா மாணிக்கலிங்கம்

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், மண்டைதீவு ம.வி)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், கொழும்பு மோதரையில் வசித்தவருமான கந்தையா மாணிக்கலிங்கம் 24.04.2014 (வியாழக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருணாசலம் செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், அம்பிகையின் (ஓய்வுபெற்ற ஆசிரியை மண்டைதீவு ம.வி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசபூபதி, அமிர்தலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நடராசா, திருநாவுக்கரசு, கேதீஸ்வரி மற்றும் முத்துலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், கேதாரகௌரி (விவேகானந்தக் கல்லூரி, கொழும்பு), கேதாரநாயகி (ஆசிரியை– சேர் ராஸிக் பரீத் மகளிர் கல்லூரி, மட்டக்குளி), கணேசலிங்கம் (UK), சசிகாந்தன் (FRANCE), திருலிங்கம் (ஆசிரியர்– பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற உமாதாரணி மற்றும் சிவகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, நந்தினி (UK), ஜெகதீஸ்வரி (FRANCE), தயாபாலினி (ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருணன், தினேஸ், சங்கீத், ஆதவலோஷன், பிரியங்கன், சாருகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.04.2014 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் கந்தரோடையிலுள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தையா உபாத்தியார் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்:மனைவி, பிள்ளைகள்.

## ஆண்டு நிறைவு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஞானபாஸ்கரதோய சங்கத்தின் 94 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இன்று மாலை 5 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ்பிரேமச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-6)


## கோழிக்குஞ்சு விநியோகம்


தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறோயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை, பேட்டுக்குஞ்சுகள் நியாய விலையில் விநியோகிக்கப்படும். எம்மிடம் கோழிக்குஞ்சு வாங்குபவர்களிடம் புறோயில் கோழி உடன் பணத்துக்கு கொள்வனவு செய்யப்படும்.

குறிப்பு:- முன்கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்

நல்லூர் பாம் சென்டர்
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர் யாழ்.

சுட்டி பாம் சென்டர்
வட்டுக்கோட்டை.
(சி-7171)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 180/=

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(சி-7171)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## திருமுருகன் கொம் நெற்

சித்திரைப் புத்தாண்டு விசேட சலுகைகளுடன்...

மிகக் குறைந்த கட்டணத்தில் 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான

### துரித தபால்கள், பொதிகள் சேவை

அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்

3 -5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

* அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்.
* கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை.

WESTERN UNION | MMBL Money Master



வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

இல. 271 A. கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். [ஆல் சிலோனிற்கு முன்பாக]
தொ.பே: 021 222 7635

பிரதான கிளைகள் :
இல. 18,பிரதான வீதி நெல்லியடி.
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, சங்கானை.
இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(சி-7173)


## தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் உள்ள அனலைதீவு வடக்கு ஜே/37, அனலைதீவு தெற்கு ஜே/38 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மட்டும் உள்ளடக்கி நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532


## தலைமைத்துவ குரு தேர்வு

இந்து சமயத்திற்கென தலைமைக்குரு ஒருவர் அவசியம் என்னும் கருத்து இந்து சமூகத்தவர்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்ட கருத்தாகும். இதற்கமைவாக சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத்தினரால் இந்துமத குருபீடாதிபதி ஸ்தானத்திற்கு அந்தண சிவாச்சாரியார்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கல்வி, ஒழுக்கம், ஆளுமை, சிவப்பொலிவு மிக்க அந்தண சிவாச்சாரியார் பீடாதிபதியாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சைவசமயம் பெருமிதம் அடையும்.

எனவே பொருத்தமான குருமார்கள் தங்கள் சுயவிபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை 10.05.2014 சனிக்கிழமைக்கு முன்னதாக

செயலாளர்
சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்,
குருகுலம் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

சைவசமய சடங்கு சம்பிரதாயங்கள், வேத,ஆகம,பஞ்சாங்க விடயங்கள் ஆலய விழாக்கள் பண்டிகைகள் முதலானவற்றிக்கு கருத்தொருமித்து முரண்பாடில்லாத வகையில் தீர்வு எட்டுவதற்கும், யாழ்ப்பாணத்தின் பெருமதமாக இருக்கும் எமது சைவ சமயத்தினை முதன்மைப்படுத்தும் வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அரச நிகழ்வுகளிலும் சந்திப்புக்களிலும் கலந்துரையாடல்களிலும் கலந்து கொள்வதற்கும், எமது மக்களின் குறைகளை எடுத்தியம்பும் வகையிலும் எமது சைவசமயம் சார்பில் அரசியல் சமூக பிரதிநிதியாகவும் திகழ்வதற்கு குறித்த பீடாதிபதி ஸ்தானம் நன்கு பயன்படும்.

பீடாதிபதியுடன் உப பீடாதிபதிகளாக இருவர் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் மூவருமாக தலைமைத்துவக் குழுவாக இயங்குவார்கள். சைவப் பெருமக்களின் ஆன்மீக அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு தலைமைத்துவப் பண்புடைய குருமார்கள் முன்வந்து விண்ணப்பிக்குமாறு வேண்டுவதோடு எதிர்காலத்தில் நல்லதொரு இந்து சமூகத்தினை உருவாக்க பொது நோக்குடன் வேறுபாடுகளை மறந்து ஒத்துழைக்குமாறு அந்தண சிவாச்சாரியார்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்
தலைவர்
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.
(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சேவைக்கு தமிழ் பெண்கள் வடக்கு மாகாணத்தில் இணைக்கப்படுவர்

## வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பெண் பொலிஸார் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு வடக்குத் தமிழ்ப் பெண்கள் பொலிஸ் திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான்டயஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் நான் கலந்து கொண்ட சிவில் பாதுகாப்பு கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள், நிகழ்வுகளின் போது பொதுமக்கள் என்னிடம் சில கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர்.

அவற்றிலொன்று வடக்கில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பெண் பொலிஸ் போதியளவு இல்லையெனவும் சில இடங்களில் தமிழ்ப் பெண் பொலிஸார் முற்றாகவே இல்லை எனவும் கூறியிருந்தனர்.

பெண் பொலிஸ் பற்றாக்குறை அல்லது இல்லாத காரணத்தினால் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லும் பெண்கள் சங்கடத்திற்கு உள்ளாக நேரிடுகின்றது. சில நேரங்களில் பெண்கள் விசாரணைகளின் போது உள்ளவற்றை கூற முடியாத நிலை காணப்படுவதாக என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதனை பரிசீலனை மேற்கொண்ட போது பொதுமக்கள் கூறிய பிரச்சினை யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்ல வடக்குமாகாணம் முழுவதும் உள்ளமை கண்டறியப்பட்டது.

இதன் மேலதிக நடவடிக்கையாக வடக்கு மாகாணத்தில் பெண் உப பொலிஸ் பரிசோதகர்களினையும் பெண் பொலிஸ் கொஸ்தாபர்களினையும் இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

இதற்கான உரிய வேலைத்திட்டங்கள் பொலிஸ் திணைக்களத்தினாலும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பெண்கள் படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றி வீட்டில் உள்ளனர்.

இவ்வாறான தகுதியுடைய பெண்கள் பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து பொதுமக்களிற்கு சிறந்த சேவையினை வழங்க முடியும்.

வடக்கில் 100 பெண் பரிசோதகர்களுக்கும் 400 பெண் பொலிஸ் கொஸ்தாபர்களுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

ஆகையினால் வடக்கு தமிழ்ப் பெண்கள் பொலிஸ் திணைக்களத்தில் இணைவதன் மூலம் தமது பிரதேசத்திலேயே கடமையாற்றக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

பொலிஸில் இணைந்துள்ள பெண்கள் துன்புறுத்தப்படுவதாக கூறப்படுகின்றது. எனினும் இது பொய்யானது. பொலிஸாராக உள்ள பெண்கள் சுதந்திரமாகவும் எவ்வித நெருக்குவாரங்களுமின்றியே பணியாற்றி வருகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு வடக்கு மாகாண பெண்கள் முன்வந்தால் பொலிஸ் பயிற்சிப் பாடசாலையொன்றினை வடக்கில் பிரத்தியேகமாக நிறுவ முடியும்.

இதனைவிட பொலிஸில் இணைந்துள்ளவர்களிற்கு உயர் கல்விக்கான சகல வாய்ப்புக்களும் பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

பொலிஸில் இணைய ஆர்வமுள்ள விருப்புமுள்ள பெண்கள் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முன் பாகவுள்ள யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திற்கு நேரில் வருமாறும் அல்லது 077 30 41 747, 077 54 15 436 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (2-4)



புதுப்பொலிவு பெற்று வரும் யா/அம்பாள் வித்தியாலய மாணவரின் கல்வி வளர்ச்சிக்கென புத்தகப் பைகளையும் பாதணிகளையும் அஞ்சலி நிறுவன இணைப்பாளர் அருட் தந்தை டேமியேல் மாண வர்களுக்கு வழங்கியிருந்தார். புத்தகப் பைகளை பெற்றுக் கொண்ட மாணவர்கள் நிற்பதனை படத்தில் காணலாம்.

# விளையாட்டு அமைச்சில் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்று உத்தியோகத்தர் வகையில் III ஆம் தரம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் வரவேற்கப்பட்ட ஏதேனுமொரு பல்கலைக் கழகத்தில் சட்டம் தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல்/உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

அத்துடன் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று வருடங்களுக்கு குறையாத நடைமுறைசார் தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். விண்ணப்பதாரி 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், விளையாட்டு அமைச்சு, இல-9, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். (அ)

# விவசாய உற்பத்தி டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

2015/2017 ஆம் ஆண்டிற்கான விவசாய உற்பத்தி தொழில் நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சை,பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகள் மூலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி குறிப்பிட்ட நகரங்களில் நடத்தப்படவுள்ளது.

அனுமதி பெறுவதற்கான தகைமைகளாக க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு சமூகக் கல்வி, விவசாயம்,வரலாறு அல்லது வாழ்க்கைத்திறன் மற்றும் குடியுரிமை கற்கை அல்லது விவசாய உணவுத் தொழில் நுட்பம் அல்லது பூங்கனி யியல் விஞ்ஞானம் ஆகிய பாடங் களுள் ஏதாவது ஒன்றில் திறமைச் சித்தியுடன் மொத்தம் 4 திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த.(உ/த) பரீட்சை யில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல்,விவசாயம்,உயிரியல் ஆகிய 6 பாடங்களில் ஏதாவது மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் மே மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், விரிவாக்கற் பயிற்சி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2015-2017 என்று கட்டாயம் எழுதப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை நேற்றைய வர்த்தமானியிலோ அல்லது வலம்புரி அலுவலகத்திலோ பார்வையிடலாம். (அ)

# நாட்டை விட்டு வெளியேறியவர்கள் காணாமற்போனோர் பட்டியலில்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் பெயர்கள் காணாமற் போனவர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கைது செய்யப்பட்ட ஒருவர் 600 பேரை சட்டவிரோதமான முறையில் வெளி நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் நாடு கடத்தியவர்கள், காணாமற் போனவர்களின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக காணாமற போனவர்களின் வரிசையில் இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறியவர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (2)

# இன்றைய இராசி பலன்

26.04.2014

(சித்திரை 13, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
துவாதசி பிற்பகல் 3.52 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 11.07 மணிவரை
இராகுகாலம் 8.57-10.29 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
சனிப்பிரதோச விரதம்

வளவன்

**மேடம்:** செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், தந்தை வழி உறவினர்களால் நன்மை யுண்டு, சுப செலவுகள் கூடும்.

**இடபம்:** புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், பிறர் உதவியுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்:** மங்கையரால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு, உடல் நலன் சீராகும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையும், வார்த்தையில் நிதானம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** அபூர்வ சந்திப்புண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், போசன சுகமுண்டு.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, பயணங்களால் நன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பணக் குறைவுகள் ஏற்படலாம், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோசபயமுண்டு, பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** பிரபலமானவர்களின் தொடர்புகளால் நன்மையுண்டு, ஆரோக்கியம் சீராகும், சகோதர வழி ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் தீரும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**மீனம்:** வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சயனசுக முண்டு, மாதர் நட்புண்டு, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அன்பளிப்பு காணியில் கட்டடம் அமைப்பதில் தொடரும் தாமதம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் உடுப்பிட்டி பிரதேசத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் பொது நூலகம் ஒன்றினை புதிதாக நிர்மாணிப்பதற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் தற்போது அவுஸ்ரேலியாவில் வசித்து வருபவரான வைத்திய கலாநிதி சீ.ஆ.குணரத்தினம் 5 பரப்பு காணியினை வடமராட்சி பிரதேச சபைக்கு 6 மாதங்களுக்கு முன்னர் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதுவரை காலமும் குறித்த காணியில் கட்டடம் அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை தமது பிரதேசத்தில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் பொது நூலகம் அமையப்பெறும் என எதிர்பார்த்தும் இதுவரை காலமும் எந்தவொரு நடவடிக்கையும் இடம்பெறவில்லை என அப் பிரதேச வாசிகளும் காணியை அன்பளிப்பு செய்தவரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி அ.தியாகேஸ்வரியிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த காணி தொடர்பான எல்லைப்படுத்தல் ஒழுங்குகளை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம்.

யாழ்.மாவட்ட செயலகத்தினால் எமக்கு இதுவரையில் எந்த பதிலும் கிடைக்கவில்லை.

இதற்கான முடிவு எமக்கு கிடைத்தவுடன் அக் காணியில் இலவச ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் பொது நூலகம் ஆகிய கட்டடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார். (2-60)

நன்றி-பொங்குதமிழ்




# நெடுந்தீவு மக்களின் குறைகளை கேட்டறிந்த த.தே.கூட்டமைப்பு

## தீர்வு பெற்றுத்தருவதாக மக்களுக்கு உறுதியளிப்பு








(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்றுநெடுந்தீவிற்குபயணம்மேற்கொண்டு அம் மக்களின் குறைகளினை கேட்டறிந்து அதனை நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்துள்ளனர்.

இம் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கும் வடக்கு மாகாண சபை முழு வீச்சில் செயற்படல் வேண்டுமெனவும் இவ் விஜயத்தின் போது யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இச் சந்திப்பின் போது நெடுந்தீவு வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பிலும் நெடுந்தீவு மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மக்களுடனான சந்திப்பின் போது நெடுந்தீவு கப்பற் போக்குவரத்து சிரமமாக உள்ளது எனவும் இதனால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

மேலும் நெடுந்தீவு அபிவிருந்தி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுவதாகவும் இங்கு குடிநீர் பெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது.

நெடுந்தீவு வைத்தியசாலை அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் மக்கள் உரிய சேவையினைப் பெறமுடியாது உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.


இதற்கு பதிலளித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் புலம் பெயர் மக்களின் உதவியின் மூலமும் மாகாண சபையின் அனுசரணையுடனும் நெடுந்தீவினை மிக விரைவில் அபிவிருத்தி செய்வோம் என உறுதியளித்துள்ளனர்.

இச் சந்திப்பில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், இ.ஆர்னல்ட், சு.பசுபதிப்பிள்ளை, ரா.இந்திரராஜா ஆகியோர் அடங்குவர்.

இதன்போது நெடுந்தீவு வைத்தியசாலை அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் மூலம் மக்களது குறை நிறைகளை கேட்டறிந்து கொண்டனர்.

தொடர்ந்து மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் தையல் பயிற்சி நிலையத்தை பார்வையிட்டனர்.

அத்தோடு அவர்களது வேண்டுகோளுக்கிணங்க தையல் இயந்திரங்களுக்கான மோட்டார்கள் விரைவில் வழங்க ஆலோசிப்பதாகவும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார். (2-4)




# சதாவதானி ஆண்டு விழா

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 107-வது ஆண்டு நினைவு விழா இன்று பிற்பகல் 5.30 மணிக்கு சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம்தலைமையில்நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி கு.இராஜகுலேந்திரன் கலந்து கொள்கிறார்.

நிகழ்வின் சிறப்பு சொற்பொழிவாக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின், நாவலர் பாரம்பரியத்தில் சதாவதானி என்னும் பொருளில் சொற்பொழிவு இடம் பெறும். தொடர்ந்து இன்றைய சூழலில் எமக்குப் பெரிதும் தேவையானது பழமையின் போற்றலா? புதுமையின் ஏற்றலா? என்னும் தலைப்பில் பராரதீஸ் தலைமையில் இளங்கோ கழகம் வழங்கும் சிறப்புப்பட்டி மன்றமும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து குருபூசைத் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்களுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (எ-10)

# கொன்ஸலீட்டாவின் மரணம் நீரில் மூழ்கியமையால் ஏற்பட்டது

## பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

ஜெரோம் கொன்சலீட்டாவின் மரணம் தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறித்த யுவதியின் மரணம் நீரில் மூழ்கியதனாலேயே ஏற்பட்டது.

குறித்த யுவதி துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டதற்கான எவ்வித பதிவுகளும் அவ்வறிக்கையில் இல்லை என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முற்பகல்10 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குருநகர் யுவதியின் மரணம் தொடர்பில் பாதிரிமார்களிற்கு தொடர்பிருப்பதாக யுவதியின் பெற்றோர் [illegible] றனர்.

குறித்த யுவதியின் மரணம் தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை பொலிஸாருக்கு கிடைத்துள்ளது.

அதில் குறித்த யுவதி நீரில் மூழ்கியதனாலேயே மரணம் ஏற்பட்டுள்ள்தாகவும் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டமைக்கான எவ்வித பதிவும் அதில் காணப்படவில்லை.

யுவதியின் பெற்றோரின் வாக்கு மூலத்தினை மட்டும் வைத்து பாதிரிமார்களினை கைது செய்ய முடியாது.

பாதிரிமார்கள் மற்றும் குறித்த யுவதியின் தொலைபேசிகள் தொழில்நுட்ப பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளதோடு சிம் கார்ட்கள் யாழ்.நீதிமன்ற அனுமதியுடன் சிம்கார்ட் நிறுவனத்தில் பரிசோதனைக்குட்படுத்தப்படவுள்ளது.

குறித்த வழக்கின் அடுத்த தவணை எதிர்வரும் 12 ஆம் திகதி பாதிரிமார்கள் யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-4)

# பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றுவரும் பேரறிஞர்களின் நினைவுப் பேருரை வரிசையில் இரண்டாவதாக நடைபெறவுள்ள மூதறிஞர் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நினைவுப் பேருரையினை இலங்கையில் இன்றைய கல்வி-பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், அச்சுறுத்தல்கள் எனும் தொனிப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# அருணலு விருதுவழங்கல்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கான கொமர்ஷல் வங்கியின் அருணலு விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை இல-244,246, யாழ்.வீதி, மானிப்பாய் எனும் முகவரியிலமைந்துள்ள கொமர்ஷல் வங்கியில் நடைபெறவுள்ளதாக மானிப்பாய் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சந்தை திறக்கப்பட்டும் வியாபாரத்திற்கு அனுமதியில்லை

## வட்டக்கச்சி சந்தை வியாபாரிகள் விசனம்



தற்காலிக சந்தை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வட்டக்கச்சி பொதுச் சந்தையை மக்கள் பாவனைக்கு விடுமாறு சந்தை வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இச் சந்தைக் கட்டம் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி நாட்டப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு கட்டட வேலைகள் ஓரளவு முடிவடைந்த நிலையில் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரினால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

எனினும், சந்தைக் கட்டடத்தின் நிர்மாண வேலைகள் முழுமையாக பூர்த்தியடையாத நிலையில் கட்டடத்தின் சுவர் அரைவாசி மட்டும் கட்டப்பட்டதோடு, கதவுகளும் போட்டப்படவில்லை.

இவ்வாறாகசந்தைக்கட்டவேலை கள் அரை குறையாகவுள்ளதென சந்தை வியாபாரிகள் சம்பந்தப்பட்டோரிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதைத் தொடர்ந்து கடந்த ஒரு சிலமாதங்களுக்கு முன்னர் அரைச் சுவருக்கு மேலாக வலைக்கம்பிகள் பொருத்தப்பட்ட போதிலும் கதவுகள் போடப்படவில்லை.



புதிதாக அமைக்கப்பட்ட சந்தை

இதனால் இதுவரை சந்தைவியா பாரிகளிடம் கையளிக்கப்படவில்லை.

சந்தைக் கட்டடம் அமைக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்துள்ள போதிலு ம் யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறியபோது அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலேயே வியாபாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இத் தற்காலிகக் கொட்டகைகளில் பொருட்களை பாதுகாப்பாக வைக்க முடியாமலும் கால் நடைகளிலும் மழை காலங்களில் தூவானம், மழை நீர் உட்புகுதல் போன்றவற்றினாலும் இவ் வியாபாரிகள் இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.

இப்பொதுச் சந்தையிலுள்ள மீன் சந்தைப் பகுதி இவ் வருடம் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மரக்கறி, பழங்கள்உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்யும் சந்தைப்பகுதி யின் கதவுகளை போட்டுவியாபார நடவடிக்கைக்கு வருவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடி க்கை எடுக்க வேண்டுமென சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-271)

## செல்வாநகர் கிராமத்திற்கு மின்விநியோகம் அரைகுறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள செல்வாநகர் கிராமத்திற்கு முழுமையாக மின்சாரம் கிடைக்கவில்லை.

செல்வாநகர் கிராம மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்.

இக்கிராமத்திற்கான மின்னிணைப்புக்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வந்தது. அக்கிராமத்தில் 800 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவற்றில் 60ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள மணலாறு வீதிக்கு மின்னிணைப்புக்களோ மின்சாரம் வழங்குவதற்கான எவ்வித ஏற்பாடுகளோ செய்யப்படவில்லை.

மணலாறு வீதிக்கு மின்னிணைப்பினை மேற்கொள்ளுமாறு கிராமசேவையாளர், மின்சார சபையினர், பாராளுமன்ற உறுப்பினர் போன்றோருக்கு மக்கள் தெரியப்படுத்தியும் இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை.

எனவே, குறித்த கிராமத்திலுள்ள ஒரு பகுதி மக்களை பாரபட்சப்படுத்தாது விரைவில் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். (9-271)

## சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தொடரும் திருட்டு சம்பவங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையிலுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விடப்படும் துவிச்சக்கரவண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் திருடப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையினரிடமிருந்து குறித்த சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தினை தனியார் ஒருவர் குத்தகைக்கு பெற்றுள்ளார்.

இந்நிலையில் பாதுகாப்பு நிலையத்தினுள் வண்டிகள் விடப்படும் போது பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை.

மாறாக வண்டிகளை எடுத்துக்கொண்டு செல்லும் போதே பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு துவிச்சக்கர வண்டிக்கு 5 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவும் அறவிடப்படுகின்றது.

இதனால், பாதுகாப்பு நிலையத்தினுள் வண்டிகளை விடுபவர்களே மீளப்பெற்றுக் கொள்கின்றார்களா என்பதை கண்காணிக்க முடியாத நிலை காணப்படுகின்றன.

இதனை சாதமாக்கிக் கொண்ட திருடர்கள் வண்டிகளை அபகரித்தச் செல்லும் நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறாக 50 துவிச்சக்கர வண்டிகளும் 2 மோட்டார் சைக்கிள்களும் சூறையாடப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை உரியவர்கள் கண்டு பி டித்து பெற்றுமுள்ளனர்.

எனவே, சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலுள்ள நடை முறையை மாற்றுமாறு மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-271)

## வெள்ள அனர்த்த நிதியை வரட்சிக்கு பயன்படுத்துக

(கண்டாவளை)

அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தினால் வருடா வருடம் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுகின்ற வெள்ள அனர்த்த நிதியை வரட்சிக்கு பயன்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு பருவ மழை குறைவாகவே காணப்பட்டது.

இதனால், வெள்ள அனர்த்தத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு வழங்கப்படவில்லை.

எனினும் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சி நிலை ஏற்பட்டு மக்கள் குடிநீருக்கு அல்லற்படுகின்றனர்.

எனவே, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களும் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட வெள்ளஅனர்த்தநிதியினை கொண்டு பிரதேசங்கள் தோறும் நீர்த்தாங்கிகள் அமைத்து குடிநீர் விநியோகத்தை ஏற்படுத்துவது அவசியமென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த நிதி அனைத்து மாவட்ட செயலகங்களூடாக பிரதேச செயலகங்களுக்கும் வருடா வருடம் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் அனுப்பி வைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (9-263)




## வாகன விபத்தில் சிறுமி படுகாயம்

(கனகபுரம்)

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் இடம் பெற்ற விபத்தில் சிறுமி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் 12.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பரந்தன் முல்லைத்தீவு வீதியினூடாக பிக்கப் வாகனம் ஒன்று சென்றுகொண்டிருந்த போது முரசுமோட்டை 2 ஆம் கட்டைப் பகுதியில் நின்ற சிறுமி வீதியைக் கடக்க எத்தனித்துள்ளார்.

இதன் போதே விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் படுகாயமடைந்த செல்வராஜா கயல்விழி (வயது 6) என்ற சிறுமி தலையில் படுகாய மடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டவைத்தியசாலையில் அனும திக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-259)

## வீட்டாரை தாக்கி தங்கம் அபகரிப்பு

(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணி யளவில் புகுந்த திருடர்கள் தந்தை மற்றும் மகளை தாக்கி விட்டு கொள்ளையிட்டு சென்ற சம்பவமொன்று இடம் பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்திற்கு பின்புறமாக உள்ள வீட்டில் தந்தை தாய் மற்றும் இரு பெண் பிள்ளைகள் வெளியில் இருந்து கதைத்துக்கொண்டிருந்த சமயம அங்கு சென்ற சிலர் மின்குமிழை உடைத்து விட்டு தந்தையான 66 வயதுடைய பஞ்சாட்சரம் சிவபாலன் என்பவரையும் 23 வயதான மகள் மற்றும் தாய் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளது டன் மகளுக்கு வாளால் வெட்டியுமுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் தாய் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலி மாத்திரமே திருடர்கள் கொண்டு சென்றுள்ளதாகவும் மகள் அணிந்திருந்த சங்கிலியை திருடர்கள் அறுத்த போதிலும் அது வீட்டினுள்ளே விழுந்துள்ளது.

படுகாயமடைந்த தந்தை மற்றும் மகள் வவுனியா பொது வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (9-250)

## வருடாந்த உற்சவம்

(கண்டாவளை)

பரந்தன் கோரக்கன் கட்டு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் இறுதி நாள் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெற்று வரும் இவ் உற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பகல் இரவு பூஜை யாக இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் தீமிதிப்பு இன்னிசை நிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (9-263)

## இலவச மருத்துவ முகாம்

(குருமன்காடு)

வட மாகாண சுகாதார ,சுதேச வைத்தியத்துறை அமைச்சின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட சித்த ஆயுர்வேத பாதுகாப்பு சபையினால் மாதந்தோறும் பின் தங்கிய பிரதேசங்களில் நடத்தப்படும் இலவச முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை வேலங்குளம், சின்னத்தம்பனை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

கோவில்புளியங்குளம், மடுக்குளம் கிராம மக்களும் இலவச மருத்துவ முகாமில் கலந்து பயன் பெறலாம் என டாக்டர்.ப. சத்தியநாதன் தெரிவித்துள்ளார். (9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இலங்கையில்



மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் துன்யா மௌமுன் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்த அவரை பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமால் பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

இலங்கை வந்துள்ள மாலைதீவு வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

மாலைதீவு அமைச்சர் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# மதரீதியான பிரச்சினைகளை தீர்க்க விசேட பொலிஸ்பிரிவு

ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

**சட்டத்தை கையில் எடுக்க எவருக்கும் அரசாங்கம் இடமளிக்காது. மத முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் சட்டத்தை கையில் எடுத்து செயற்படுபவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும். இத் தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸ் திணைக்களத்தில் ஒரு தனியான புலனாய்வுப் பிரிவை ஏற்படுத்துமாறு தான் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நாட்டின் தேசிய சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் அனைவரையும் சந்தித்து நேற்று முன்தினம் உரையாடிய போது அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யாருக்கும் சட்டத்தை கையில் எடுத்து செயற்பட இடமளிக்க முடியாது. எனவே, தராதரம் பார்க்காமல் இவ்விதம் நடந்து கொள்ளும் அமைப்புகளுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அரசியல்வாதிகள் கூட சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவதற்கு தான் அனுமதியளிக்கமாட்டேன். அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்பிரதேசத்தில் உள்ள அக்கட்சியின் முக்கியஸ்தர்களான சஜித் பிரேமதாஸ, வெத ஆராய்ச்சி ஆகியோருடன் அங்கு சென்றிருந்தால் இந்த பிரச்சினை தோன்றியிருக்காது.

எந்தப் பிரதேசத்திற்கு அரசியல்வாதிகள் செல்லும் போது அப்பகுதி மக்களுடன் சென்று பார்த்தால் பிரச்சினை எழுந்திருக்காது என்றும் கூறினார்.

1989 ஆம் ஆண்டில் தினேஸ் குணவர்தனவையும் அவரது ஆதரவாளர்களையும் நுகேகொடை சந்தியில் சிவில் உடையில் இருந்த பொலிஸார் மூலம் அன்றைய அரசாங்கம் ஈவிரக்கமற்ற முறையில் தாக்கிய சம்பவத்தையும் இன்று ஐக்கிய தேசியக்கட்சியினர் மறந்துவிட்டார்கள் என்று கூறினார்.

இலங்கையில் அனுபவமிக்க சிரேஷ்ட இடது சாரி அரசியல்வாதியான டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வாவை பொலிஸார் தாக்கி அவரை கூண்டில் போட்டும் அடித்தார்கள். நானும் அன்று இத்தகைய தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் மொறட்டுவையில் வைத்து அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தாக்கப்பட்டுள்ளார். அதற்கு அடுத்தபடியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவும் வனாத்தமுல்லைக்கு அருகில் தாக்கப்பட்டார். இந்த தாக்குதல்கள் குறித்து எந்தப் பத்திரிகைகளோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ எவ்வித கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை.

ஏன் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே ஒருசாரார் பொல்லுகளால் தாக்கப்பட்டார்கள். இதுபற்றி எவரும் விமர்சிக்கவோ கண்டிக்கவோ இல்லை.

சமீபத்தில் ஒரு பௌத்த பிக்குவை தாக்குதலில் இருந்து பொலிஸார் காப்பாற்றி இருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் கூறுகையில்,

இந்த தேரர் மீதான தாக்குதல் குறித்து நாம் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறோம் என்றும் இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (2)

# நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான சட்டத்தில் திருத்தம்

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

தன்னார்வத்தொண்டு நிறுவன நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி வழங்குதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான சட்டங்களில் திருத்தம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெறும் நிதி உதவிகள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கக் கூடிய வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1997ஆம் ஆண்டு தன்னார்வத் தொண்டு நிறுவன நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நிதி மூலங்களை சரியான முறையில் கண்டறியவோ அல்லது செலவுகளை சரியாக அவதானிக்கவோ தற்போதைய சட்டத்தில் சரியான வழிமுறைகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே புதிய சட்டங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கை பெண்ணிடம் தங்கம் பறிமுதல்

இலங்கையில் இருந்து திருச்சி சென்ற ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பயணித்த பெண்ணிடம் 11 இலட்சம் இந்திய ரூபா மதிப்புள்ள 396 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

திருச்சியில் இருந்து டுபாய், சிங்கப்பூர், மலேசியா உட்பட வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்படுகிறன.

இலங்கை தலைநகர் கொழும்பில் இருந்து திருச்சிக்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் மதியம் சென்றது. இதில் பயணித்த பயணிகளின் ஆவணங்கள் மற்றும் உடைமைகளை குடிவரவு மற்றும் சுங்க அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது ஒரு பெண் அணிந்திருந்த நகையில் சுங்க அதிகாரிகளுக்கு சந்தேகம் வந்தது. இதையடுத்து அந்த பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் வளையல்களை சோதனை செய்தபோது, கலப்படம் இல்லாமல் சொக்க தங்கத்தில் செய்து கடத்தி வந்தது தெரிந்தது. (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 | 100 |
| தக்காளி | 40 | 30 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 |
| கோவா | 30 | 30 | 35 | 30 |
| கரட் | 90 - 140 | 80 | 90 | 100 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 20 | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 - 100 | 90 | 80 - 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 40 | 60 | 50 |
| பயற்றங்காய் | 40 | 60 | 70 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 60 | 40 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 25 - 50 | 80 | - | 100 |
| போஞ்சி | - | 140 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | - | 30 | 30 | - |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 | 20 |
| தேசிக்காய் | 60 - 90 | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 - 50 | 40 | 40 | 30 - 40 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 80 |

# விருப்புவாக்கு முறையை மாற்றியமைக்க வேண்டும்

அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

தற்பொழுதுள்ள தேர்தல் முறை திருத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மேலும் குறைவடையலாம் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக சஜித் பிரேமதாஸ எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது,

முதலாவது பாராளுமன்றத்தில் 27 அமைச்சர்கள் இருந்ததோடு, ஒரு பெண்ணும் அமைச்சராக இருந்தார்.

இரண்டாவது பாராளுமன்றத்தில் 23 அமைச்சர்களில் ஒருவரும் 3 ஆவது பாராளுமன்றத்தில் 31 அமைச்சர்களில் 3 பேரும் 4 ஆவது பாராளுமன்றத்தில் 21 அமைச்சர்களில் 2 பேரும் 5 ஆவது பாராளுமன்றத்தில் 34 அமைச்சர்களில் 2 பேரும் 6 ஆவது பாராளுமன்றத்தில் 55 அமைச்சர்களில் 3 பேரும் 7 ஆவது பாராளுமன்றத்தில் 66 அமைச்சர்களில் 2 பேரும் பெண் அமைச்சர்களாக இருந்தனர்.

பாராளுமன்றம் தெரிவாகும் எம்.பி.க்கள் தொகை குறைவாக இருந்ததால் பெண் அமைச்சர் தொகையும் குறைவடைந்தது. இந்த நிலை இலங்கையில் மட்டுமன்றி ஏனைய ஆசிய நாடுகள் மற்றும் மேலைத்தேய நாடுகளிலும் காணப்படுகின்றன.

விருப்பு வாக்கு முறையினால் இந்த நிலை காணப்படுகிறது. தேர்தல் முறையை மாற்றாவிட்டால் பெண்கள் தெரிவாவது குறைவடையலாம். (2)

# 153 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது

மன்னார் உப்புக்குளத்தில் 153 கிலோகிராம் எடை கொண்ட கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்றது.

மீன் ஏற்றிசென்ற லொறி ஒன்று தள்ளாடி இராணுவ முகாமுக்கு அருகில வைத்து சோதனையிடப்பட்ட போது அதில் இருந்தே கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர்

இந் நிலையில் கைது செய்யப்பட்ட இருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளைக்குழு பொது சபைக்கூட்டம் ஞாயிறன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.அருந்தவ நாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மடத்துப்புலம் கிளைக்கான கூட்டம் இமையாணன் கலைமகள் ச.ச.நிலையத்தில் தவிசாளர் அ.விமல்ராஜ் தலைமையிலும் கரணவாய் தெற்கு கிளைக்கான கூட்டம் கரணவாய் வள்ளுவர் ச.ச.நிலையத்தில் தவிசாளர் பொ.மகேஸ்வரன் தலைமையிலும் உடுப்பிட்டி கிளையின் கூட்டம் உடுப்பிட்டி நாவலர் பாலர் பாடசாலையில் தவிசாளர் அ.தயாளன் தலைமையிலும் கம்பர்மலை கிளை, கம்பர் மலை கலைவாணி ச.ச.நிலையத்தில் தவிசாளர் வீ.இரத்தினகாந்தன் தலைமையிலும் வல்வெட்டி கிளையின் கூட்டம் மாவடி பராசக்தி ச.ச.நிலையத்தில் தவிசாளர் பொ.கோகுலன் தலைமையிலும் கரணவாய் வடக்கு கிளைக் கூட்டம் நவிண்டில் கலைமதி பாலர் பாடசாலையில் தவிசாளர் ஈ.சி. சிறிதரன் தலைமையிலும் இமையாணன் கிளைக்கான கூட்டம் இமையாணன் கலைமகள் பாலர் பாடசாலையில் தவிசாளர் த.தவமன்னன் தலைமையிலும் கரவெட்டி மேற்கு கிளையின் கூட்டம் கரவெட்டி திருவள்ளுவர் ச.ச.நிலையத்தில் தவிசாளர் ம.விமலன் தலைமையிலும் கரவெட்டி வடக்கு கிளையின் கூட்டம் தேவரையாளி நரசிங்கர் ஆலயத்தில் தவிசாளர் க.கமலநாதன் தலைமையிலும் அல்வாய் தெற்கு கிளை கூட்டம் அல்வாய் நூல்நிலையத்தில் தவிசாளர் க.பிரதீபன் தலைமையிலும் மண்டான் கிளையின் கூட்டம் மண்டான், மாவலி படிப்பகத்தில் தவிசாளர் ம.சிவபாலன் தலைமையிலும் நடைபெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# நாட்டின் சட்டம் ஒழுங்கு கேள்விக்குள்ளாகியுள்ளது

## ஜோன் அமரதுங்க எம்.பி.சுட்டிக்காட்டு

**(கொழும்பு) அரசியலமைப்பு ரீதியாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள சிறப்புரிமைகள் மீறப்பட்டு நாட்டின் சட்டம் ஒழுங்கும் கேள்விக்கு உட்படுத்தப் பட்டுள்ளது என ஜோன்அமரதுங்க எம்.பி.சபையில் தெரிவித்தார்.**



அன்றொரு காலத்தில் அத்தனகல்ல யுகம் காணப்பட்டது. இன்று மெதமுலன யுகம் கோலோச்சியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி மத்தள விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகத்தை கண்காணிப்பதற்காக அங்கு சென்ற ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர்.யோகராஜன், ஏரான் விக்கிரமரட்ண, நளீன் பண்டார, அஜித் மான்னவபெரும, அஜித் பீ பெரேரா ஆகியோர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டமை தொடர்பாக உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டதாக தெரிவித்து பாராளுமன்றத்தில் நேற்று முனதினம் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களின் நிதிகள் அபிவிருத்தி திட்டங்களுக்காக எவ்வாறு செலவு செய்யப்படுகின்றது என்பது தொடர்பில் தேடிப்பார்க்கும் உரிமை எம்.பிமாருக்கு உண்டு.

அரசியலமைப்பு ரீதியாக எம்.பிக்களுக்கு வழுங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகள் மத்தளவில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தால் மீறப்பட்டுள்ளது.

நாட்டில் எங்கும் செல்லலாம் என அரசாங்கம் கூறுகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே மத்தளவில் எமது எம்.பிக்கள் தாக்கப்பட்டனர்.

மக்கள் பிரதி நிதிகளுக்கே நாட்டில் எங்கும் செல்ல முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை மூடி மறைக்கவே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துள்ளது. பொது நல வாய நாடுகள் அமைப்பின் தலைவராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவி வகிக்கின்றார்.

அதேபோன்று பொது நலவாய நாடுகள் அமைப்பு பாராளுமன்ற அமைப்பின் தலைவராக சபாநாயகராக நீங்கள் பதவி வகிக்கின்றீர்கள்.

இவ்வாறானதொரு நிலையிலேயே நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்துள்ளது. இது மோசமான முன்னுதாரணமாகும். இது மட்டுமல்லாது எமது எம்.பிக்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்ட சம்பவமாகும்.

இது தொடர்பில் ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவிலும் பொது நலவாய நாடுகளின் பாராளுமன்ற அமைப்பிலும் முறையிடவுள்ளோம்.

இது நாட்டின் அரசியலமைப்பை மீறிய நடவடிக்கையாகும். கடுமையான சிறப்புரிமை மீறலாகும். எமது எம்.பிக்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டமையை விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்படுமா? என அரசாங்கத்திடம் நான் கேட்கின்றேன் என்றார். (2)

# தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரின் செயற்பாடு நாட்டிற்கு எதிரானது

## ஜனாதிபதி மஹிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்ற சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களுக்கு மறைந்து கொண்டு நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

சுரேஷ் பிரேமசந்திரன் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான அறிக்கைகளை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், தம்மை சர்வாதிகாரியாக பிரசாரம் செய்வார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோபி, அப்பன் தலைமையிலான குழுவினர் வடக்கில் புலிகள் தொடர்பான சுவரொட்டிகளை ஒட்டியிருந்ததாகவும் இவ்வாறான விடயங்களை சுலபமாக எடுத்துக் கொள்ளமுடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக போராட முடியாது எனவும எச்சரிக்கையுடன் இருக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# எனது மகன் விடுதலைக்கு இறுதி மூச்சுவரை போராடுவேன்

## பேரறிவாளனின் தாயார் சபதம்

(சென்னை)

எனது மகன் விடுதலைக்கு இறுதி மூச்சு உள்ளவரை போராடுவேன் என்று பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன் உட்பட 7 பேரின் விடுதலை தொடர்பான வழக்கில் நேற்று தீர்ப்பளிக்கப்பட இருந்த நிலையில், உச்ச நீதிமன்றம், இந்த வழக்கு விசாரணையை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி திடீரென உத்தரவிட்டது.

இந்நிலையில், சென்னையில் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் பேசிய பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள், எனது மகன் விடுதலைக்காக எனது போராட்டம் மீண்டும் தொடரும். இனி அதிக பலத்தோடு போராட்டம் நடத்துவேன்.

முதலமைச்சர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளேன். ஊடகங்களின் ஒத்துழைப்பு எனக்கு தேவை.

எனது மகனை முதலமைச்சர் காப்பாற்றுவார். எனது மகன் விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது.

தீர்ப்பு தள்ளிப் போனதற்கு அரசியல் குறுக்கீடுதான் காரணமோ என்று நினைக்கிறேன்.

நீதி எங்கள் பக்கம் உள்ளது. நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை உள்ளது. எத்தனை காலத்திற்குதான் இந்த வழக்கை சொல்லி அரசியல் செய்வார்கள்.

ஒரு பரோல் கூட இல்லாமல் 23 வருடங்களாக சிறைக் கொடுமையை அனுபவிக்கிறார்கள்.

எனது மகனுக்கும், ராஜீவ் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்று எனது மகனிடம் வாக்குமூலம் வாங்கிய அதிகாரியே சொல்லி விட்டார் அது எங்கள் பலத்தை கூட்டிவிட்டது.

எவ்வளவுதான் அரசியல் குறுக்கீடுகள் இருந்தாலும் என் மகனை சட்டப்படி மீட்பேன் என்று அற்புதம்மாள் கண்ணீர் மல்க தெரிவித்தார். (2)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை |
| --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 45<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc / உதவி விரிவுரையாளர்<br>தொ.இ: B/3018 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 80 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் A/L/ கிராம உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரததானவர்<br>தொ.இ: B/3021 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 10<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: முதுகலைமாணி/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரததானவர்<br>தொ.இ: B/3022 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 5'10"தகைமை/தொழில்: BA, MA / பதிவாளர்<br>தொ.இ:B/3023 |

| இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 43 செவ் 4 இல்<br>உயரம்: 5'தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும், விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/3017 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 48<br>தகைமை/தொழில்: O/L / முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவர்,துணையிழந்தவர்களும்ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/3019 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: 62 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/Lஎதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: G/3026 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 18.25<br>உயரம்: 5'3"தகைமை/தொழில்: BA, கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/3027 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரை மாற்றம் செய்யும் நொக்கியா



NOKIA
Connecting People

உலகின் முன்னணி மொபைல் நிறுவனமான நோக்கியா இனி மைக்ரோசொப்ட் மொபைல் என பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது.

உலகின் முன்னணி மொபைல் நிறுவனமான நோக்கியா மைக்ரோசொப்ட் நிறுவனத்துடன் 7.3 பில்லியன் டொலருக்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

இதன்படி இம்மாத இறுதிக்கு பின் நோக்கியா இனி மைக்ரோசொப்ட் மொபைல் என பெயர் மாற்றம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள் ளது.

எனினும் இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த 2013 ஆம் ஆண்டின் 7.2 பில்லியன் டொலருக்கு இரு நிறுவனங்களும் செய்து கொண்ட ஒப்பந்தம் இம்மாத இறுதியில் முடிவடைவதையடுத்து இந்தப் பெயர் மாற்றம் ஏற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிவேக மெமரி காட்





தற்போது மொபைல் சாதனங்களில் தரவு, தகவல்களை சேமிப்பதில் microSD கார்ட்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

இதன் காரணமாக தொடர்ந்தும் பல்வேறு சேமிப்புக் கொள்ளளவு வேகம் உடைய microSD கார்ட்கள் அறிமுகமாகிய வண்ணம் உள்ளன.

இவற்றின் தொடர்ச்சியாக Toshiba நிறுவனம் உலகிலேயே வேகம் கூடிய microSD கார்ட்டினை அறிமுகம் செய்துள்ளது.

இதில் 260MB/s வேகத்தில் தரவு களை வாசித்துக்கொள்ளவும். 240 MB/s வேகத்தில் தரவுகளை பதித்துக் கொள்ளவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விரைவில் வெளியாகும் அதிவேக அல்ட்ரா இணையம்



பிரித்தானியாவில் தற்போது புரோட்பாண்ட் இணைய வலையமைப்பு சேவையை வழங்கிவரும் Sky மற்றும் Talk Talk ஆகியன இணைந்து அல்ட்ரா வேகம் கொண்ட இணைய சேவையை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக City Fibre எனும் புதிய நாமத்துடன் இரு நிறுவனங்களும் இணைகின்றன.

இது வலையமைப்பு சேவையினை வழங்குவதற்கான பைபர் ஒப்டிக்கல் வலையமைப்பினை இரு நிறுவனங்களும் தாமாகவே நிர்மாணித்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காளான் மூலம் தங்கத்தை பிரிக்கலாம்



மனித வாழ்வில் அத்தியாவசியமான பொருளாக மாறிவிட்ட கைபேசிகள் பல்வேறுபட்ட உலோகங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்படுவது யாவரும் அறிந்ததே.


ஒரு இலட்சம் எண்ணிக்கையான பழைய கைபேசிகளில் 2.4 கிலோகிராம் தங்கம், 9 ஆயிரம் கிலோகிராம் செப்பு, 25 கிலோகிராம் வரையான வெள்ளி ஆகிய உலோகங்களை இரசாயனப் பதார்த்தங்களின் உதவியுடன் பிரித்தெடுக்க முடியும்.

எனினும் இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்தும்போது 20 சதவீதமான உலோகங்களையே பிரித்தெடுக்க முடியுமாம்.

ஆனால் தற்போது காளான்களைப் பயன்படுத்தி கைபேசிகளிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுக்கும் நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதன்மூலம் 80 சதவீதமான உலோகங்களை பிரித்தெடுக்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அப்பிள்- எல்ஜி இணைவு



அப்பிள் நிறுவனம் மீள் தன்மை கொண்ட ஸ்மார்ட் கடிகாரங்களை உற்பத்தி செய்வதில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

இந்த மீள்தன்மை கொண்ட ஸ்மார்ட் கடிகாரங்களுக்கான திரையினை LG நிறுவனம் தயாரித்து வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

iWatch எனும் பெயருடன் இரு வகையான கடிகாரங்கள் வெளி வரவுள்ளன.

அதாவது ஆண்களுக்காக ஒரு வடிவமைப்பிலும் பெண்களுக்கான பிறிதொரு வடிவமைப்பிலும் வெளியாகவுள்ளன.

இவை 1.3 அங்குலம் மற்றும் 1.7 அங்குல அளவுடையனவாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எக்ஸ்பி இயங்கு தளம் முற்றாக நிறுத்தப்பட்டது





மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ் எக்ஸ்பி இயங்கு தளத்தின் சேவையானது கடந்த 8 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தவிண்டோஸ் எக்ஸ்பி அறிமுகம் செய்யப்பட்டு 13 ஆண்டு களுக்கு மேல் ஆகி விட்டது இந்நிலையில் அதை பயன்பாட்டில் இருந்து முற்றிலும் அகற்றிக் கொள்ளப்படும் என்று மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி அது தொடர்பான தொழில்நுட்ப சேவையும் வழங்கப்படமாட்டாது என்றும் விண்டோஸ் எக்ஸ்பியை பயன்படுத்துபவர்கள் விண்டோஸ் 8.1 ஐ வாங்கிக் கொள்ளலாம் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் விண்டோஸ் எக்ஸ்பியை பயன்படுத்தும் வங்கிகள் முன்கூட்டியே செய்து கொள்ள வேண்டுமென்றும் ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

# இரும்பைவிட உறுதியான கண்ணாடி கண்டுபிடிப்பு




இரும்பைவிட உறுதியான கண்ணாடியை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அமெரிக்காவின் யேல்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் சிக்கலான கலப்பு உலோக தாதுக்களில் இருந்து ஒரு புதிய சிறப்பு தாதுவை உருவாக்குவதற்கான வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து விஞ்ஞானிகள் குழு தலைவர் ஜான்கோர்ஸ் கூறியதாவது, வளையும் தன்மையுடன் இரும்பைவிட வலிமையான இந்த தாதுவுக்கு பல்க் மெட்டாலிக் கிளாஸ் (பி.எம்.ஜி) என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புதிய கண்ணாடியைக் கொண்டு உடையாத மருத்துவ உபகரணங்கள், மொபைல் போன் மற்றும் எலெக்ட்ரோனிக்ஸ் பொருட்களை தயாரிக்கலாம்.

கடந்த 4 ஆண்டுகளில் உடையாத வலிமையான கண்ணாடியை தயாரிப்பதற்கான ஒரு இலட்சம் கலவை தாதுக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு ஜான் ஸ்கோர்ஸ் கூறியுள்ளார்.

# மின்சார பட்டியலை குறைக்க சில டிப்ஸ்



உங்கள் வீட்டில் அதிகமான கரண்ட்பில் இருந்தால் அதனைக்கீழே கொடுக்கப்பட்டுள்ள டிப்ஸின் மூலம் குறைத்துக்கொள்ளலாம்.

1. தொலைக்காட்சி, கணனி மற்றும் எலக்ட்ரோனிக் பொருட்களை பயன்படுத்திய பின்னர் முழுவதுமாக சுவிட்ச்ஓப் செய்து விடவும்.

2. A/C யூனிட்டுக்களை 18 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வைப்பதை தவிர்த்து 24 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் வைத்தால் நிச்சயமாக கரண்ட் பில் பாதியாக குறைய வாய்ப்புள்ளது.

3.மேலும்A/C யை பொருத்தும் போது சூரிய ஒளி நேராகப் படும் இடங்களைத் தவிர்த்து கட்டட நிகழ்களிலோ அல்லது மரத்தின் நிழல் படும்படியான இடங்களிலோ பொருத்தினால் நன்று.

4.இதே போன்று பழைய எலக்ட்ரிகல் அயர்ன் பொக்சை மாற்றிவிட்டு புதிய எலக்ட்ரோனிக் ஓட்டமற்றிக் அயர்ன் பொக்சை உபயோகிக்கலாம்.

5.குளிர்சாதனப் பெட்டிகளை பயன்படுத்தும்போது மிதமான தட்பவெப்ப நிலையில் வைக்கவும். மேலும் சுவரினைவிட்டு பிரிட்ஜ்க்கு போதிய இடைவெளி மற்றும் காற்று இருக்கும்படி வைக்கவும்.

6.தரமான பல்ப்புக்களை உபயோகப்படுத்தவும்.

7.வோஷிங்மெஷின்களை பயன்படுத்தும்போது அதற்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட டிடெர்ஜண்ட் பவுடர்களை பயன்படுத்தினால் நன்று.

8.வெயில் காலத்தின்போது ceater பயன்படுத்துவதைக் குறைக்கலாம்.

9.எலெக்ட்ரோனிக் பிரசர் குக்கரை பயன்படுத்தினால் மின் பயன்பாட்டை குறைப்பதுடன் துரிதமாகவும் சமைக்க உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....மழையோ வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. மேகம் கவிந்து இருட்டியிருந்ததாலும், மலை மேலிருந்து நாலா புறமும் மழை நீர் வந்துகொண்டிருந்ததாலும் எந்தப்பக்கம் செல்வதென்றும் தெரியவில்லை. மேலே சென்றவர்கள் திரும்பி வரும் வரையில் எங்காவது ஒதுங்கியிருக்கலாம் என்றாலும் மழைக்கு ஒதுங்க இடமில்லை.

என்ன செய்வதென்று புரியாத நிலையில் மழையில் தவித்துக் கொண்டிருந்தார் புதிய பக்தர்.

அவரின் தவிப்பைப் பார்த்து இரக்கம் கொண்ட பிலாவடி கருப்பர் தனது பிரதிநிதியாக நாய் ஒன்றினை அனுப்பி அவரைக் காப்பாற்றச் சொல்லியிருக்கிறார்.


தன் முன்னே திடீரெனத் தோன்றிய நாயைக் கண்டு ஆச்சரியமடைந்த அந்த பக்தர் தன் முன்னே வாலை ஆட்டிக் கொண்டு தன்னைப் பின்தொடருமாறு காட்டிய குறிப்பை உணர்ந்து அதனைப் பின்தொடர்ந்தார்.

மெதுவாக நடந்து சென்ற நாய் இப்போது வேகமாக ஓடத் தொடங்கியது. பக்தரும் அதனைப் பின்தொடர்ந்து ஓடினார். அது ஓடி நின்ற இடம் ஒரு குகையைப் போல் தோற்றமளிக்கவே பக்தரும் அங்கு சென்று மழைக்கு ஒதுங்கிக் கொண்டார்.

குகைக்கு நடுவே பெரிய வழியொன்று தோன்றவே, நாய் வசதியாக உள்ளே சென்றுவிட்டது. வெளியே சாரல் அதிகமாக இருக்கவே பக்தரும் குகைக்குள் சென்று விட்டார்.

ஓடிவந்த களைப்பு, பசி மயக்கம் இரண்டும் சேர்ந்து சோர்வடைய வைக்கவே உள்ளே அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

விடிந்ததும்தான் தெரிந்தது அது வெளியே செல்ல வழியில்லாத குகையென்று. குகையின் முகப்பில் தெரிந்த



குதிரையூற்று

சின்ன இடுக்கு வழியே சூரிய வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது. பக்தருக்கு ஒன்றும் புரியவில்லை. வெளியே செல்வதற்கு வழியில்லாத குகையென்றால் உள்ளே மட்டும் எப்படி வரமுடிந்தது?

குகையைச் சுற்றிச் சுற்றி வந்தார். இருட்டில் குகைக்குள் ஒன்றும் தெரியவில்லை. அப்போதுதான் தனக்கு வழி காட்டி வந்த அந்த நாயும் அங்கு இல்லை என்ற விபரம் அவருக்குப் புரிந்தது.

தன்னைச் சுற்றி ஏதோ மாயாஜாலம் நிகழ்ந்திருப்பது மட்டும் அவருக்குப் புரிந்தது. என்ன புரிந்து என்ன பயன்? வெளியே செல்வதற்கு வழி தெரியவில்லையே?

எல்லா தெய்வங்களையும் துணைக்கு அழைத்து வேண்டினார். சித்தர்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இந்த மலையில் யாரேனும் ஒரு சித்தர் வந்து தன்னைக் காப்பாற்ற மாட்டாரா? என்றெல்லாம் கூட எண்ணினார்.

அந்த பக்தர் கோரக்கரின் பரம பக்தர் ஆகையால் கோரக்கரை மனதிற்குள் நினைத்த வண்ணம் தன்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுமாறு வேண்டினார்.

அப்போது ஓங்கார ஒலியொன்று அந்தக் குகையின் மூலையிலிருந்து

## ஆன்மீகம் 103

சன்னமாகக் கேட்கவே ஒலி வந்த திசையை நோக்கிச் சென்றார். இருட்டில் உருவம் ஏதும் புலப்படவில்லை. ஆனால் யாரோ ஒரு மகான் மட்டும் அங்கு அமர்ந்திருப்பது மட்டும் நிழலாகத் தெரிந்தது.

வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் கதறினார். இவரின் கதறல் சத்தத்தால் தவம் கலைந்து, எழுந்தது அந்த உருவம். இருட்டிலும் நிழலுருவாகத் தெரிந்த அதனிடம் தான் வழி தவறி வந்துவிட்ட விபரத்தையும் வெளியே செல்ல வழி தெரியாமல் தவிப்பதையும் எடுத்துக் கூறினார்.

வேறெதாவது வேண்டுமா?

பசியாயிருக்கிறது, சாப்பிட ஏதாவது.... இல்லையென்றாலும் பரவாயில்லை, வெளியே சென்றால் போதும்.


பரவாயில்லை சாப்பிடு.

எதைச் சாப்பிடுவது? என்று திகைக்கையில் கீழே குனிந்து பார்த்த போது இலை ஒன்றில் தினை மாவு வைக்கப் பட்டிருந்தது தெரிந்தது.

பசியில் அதனை வேக வேகமாகச் சாப்பிட ஆரம்பித்தவருக்கு திடீரென விக்கல் ஏற்படவே நிமிர்ந்து பார்த்தார். மண் கலயமொன்றில் தண்ணீர் இருந்தது. மடக் மடக்கென்று குடித்த அவருக்கு இப்பொழுதுதான் புதுத் தெம்பு வந்தது. *(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**22**

....நம் ஊரில் வாய் கட்டி வயிறு கட்டிப் பொருள் சேர்த்தேன் என்பார்கள்; ஆனால் அரபு நாடுகளில் வாழும் தமிழர்கள் ஆண்மையைக் கட்டியும் பொருள் சேர்க்கிறார்கள்.

ஷார்ஜா- அஜ்மான் தமிழர் நற்பணிக் கழகத்தின் தலைவர் என் சிந்தையில் குடியிருக்கும் சிவாவை எப்படி என்னால் மறக்க முடியும்?

உறங்கும்போது கூட ஓடிக் கொண்டே உறங்குகின்ற செயல்வீரனல்லவா சிவா!

பூமியைப் போல நிற்காமல் சுற்றிக் கொண்டிருக்கிற சுறுசுறுப்புத் தேனீயல்லவா சிவா!

தமிழர் நற்பணிக் கழகத்தின் செயலாளர் என் கண்ணுக்குள் இருக்கும் சகோதரர் கலியமூர்த்தியை எப்படி என்னால் எண்ணாமலிருக்க முடியும்!

அன்புக்காக அழுதுவிடும் ஆன்மாவுக்குச் சொந்தக்காரனல்லவா அந்த ஈர இதயம் கொண்ட இனிய சகோதரன்.

என்னையும் என் கவிதைகளையும் தன் இதயத்தின் எல்லா அறைகளிலும் வைத்து, வாசித்து வாசித்து நேசித்து நேசித்து, பூசித்துப் பூசித்து வரும் அந்தத் தங்ககுணம் கொண்ட சகோதரர் தாவூத் பாட்சாவை நித்தம் ஒரு பொழுதேனும் நான் நினைக்காத நாளில்லையே.

உழைத்து உழைத்து அங்குலம் அங்குலமாய் உயர்ந்து உயர்ந்து இன்று வாழ்க்கையைத் தன் வாசலுக்கு வந்து வணங்க வைத்துக் கொண்டிருக்கிற பெருமகனல்லவா தாவூத் பாட்சா.

அவரை அவரின் அருமைச் சகோதரர் கவிஞர் அப்துல் கதீமை, அவர்களின் துணைவியார்களான வணக்கத்துக்குரிய அந்தச் சகோதரிகளை, ஆடைகட்டிய தென்றலாய் உலவும் அவர்களின் அன்புச் செல்வங்களை என் ஞாபகத்தின் கடைசிச் சொட்டு இருக்கும் வரைக்கும் மறக்க முடியுமா!

துபாயில் தமிழர்களின் திலகமாய் திகழும் சாதனை வீரர், சகோதரர் ஜமால் மீரான் அவர்களை, அவர்தம் அன்புத் துணைவியாரை நன்றியோடல்லவா




நாள்தோறும் நினைக்கிறேன்.

ஓ! அந்த ராஜ மாளிகைகள்- மரகத விரிப்புகள்- தேவ விருந்துகள்- தேன் நிமிடங்கள்- இவைகளெல்லாம் இந்த வானத்தின் கீழ் எல்லோருக்கும் சாத்தியமில்லையா என்று எண்ணிக் கிடந்தேனே!

அவர்கள் என் மனசின் ஒரு பகுதியை அன்பினால் நிறைத்தார்கள்; மனசின் மறு பகுதியை அறிவினால் நிறைத்தார்கள்.

இந்த விஞ்ஞானச் சுழற்சியின் வேகம் வாழ்க்கையின் முகத்தை எப்படியெல்லாம் நிறம் மாற்றிவிடுகிறது என்று நிறையச் சொன்னார்கள்.

அரபிகள், பெற்றோல் விற்று விற்றே சூரியனை வாங்கிவிடும் சுயபலம் கொண்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

அவர்களின் நேற்றுக்கும் இன்றுக்கும் எத்தனையோ நூற்றாண்டு இடைவெளி இருக்கிறது.

பெற்றோலுக்கு முன் பெற்றோலுக்குப் பின் என்பதுதான் அரபிகளின் நாகரிக வரலாறு.

ஒட்டகம், கடல், பாலைவனம், மசூதி இவைகளே அவர்களின் பழைய வாழ்க்கையின் திசைகள்.

கட்டுமரம் ஏறி கடல்மீன் பிடிப்பார்களாம்.

பிடித்த மீனைச் சுடுமணலில் புதைப்பார்களாம்.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மணற் சூட்டில் அது வெந்திருக்குமாம்.

அப்படிச் சுட்ட மீனும் பேரீச்சம் பழமுமே அவர்களின் பழைய ஆகாரங்கள்.

சட்டென்று ஒரு நாள் அந்த பூமியில் பெற்றோல் பீறிட்டது.

அவ்வளவுதான்!

ஐந்து நூற்றாண்டுகள் அடைய முடியாத வளர்ச்சியை அரபிகள் ஐந்தே ஆண்டுகளில் அடைந்தார்கள்.

ஒட்டகத்திலிருந்து அரபிகள் செவர்லெட்டுக்குத் தாவினார்கள்.

இருக்கிற பெற்றோலை வைத்து இல்லாத மழையைக்கூட அவர்களால் விலைபேச முடிந்தது.

அந்தப் பாலைவனத்தை ஊட்டியாய் மாற்றுவதற்கு உழைப்பாளிகள் தேவைப்பட்டார்கள்.

இவர்கள் போனார்கள்.

கட்டடத் தொழிலாளிகளாய், தச்சர்களாய், மின்சார ஊழியர்களாய், அரபிகளின் உதவியாளர்களாய், வங்கிப் பணியாளர்களாய், பெற்றோல் கிடங்கு நிர்வாகிகளாய்- வாழ்க்கை தேடிப்போய் அந்த மண்ணுக்கு வாழ்க்கை தருகிறவர்களாய் தொழில் துறை வல்லுநர்களாய் அவர்கள் ஆனார்கள்.

-வைரமுத்து- *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆட்டுக்கார ஆண்டியப்பன்

...இப்போது நீ வளர்த்து வரும் ராமுதான் அதற்கு ஏற்றது! அதை இன்று மாலை ஓட்டிக் கொண்டு கங்காபுரம் போகப் போகிறேன். ஏனெனில், அதிகாலையில் கிடாவெட்டி பூஜை போடுவாராம்! நிறையப் பணம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்" என்றதும் லட்சுமி ஆயிரம் தேள்கள் கொட்டியது போல் துடித்தாள். "ஐயோ! வேண்டாம்! நான் செல்லமாக வளர்த்த ஆட்டுக் குட்டி அது!" என்று லட்சுமி அலறித் துடித்தும், ஆண்டியப்பன் கேட்கவில்லை. அன்று இருட்டும் நேரத்தில், ராமுவைத் தரதரவென இழுத்துக் கொண்டு போய் விட்டான். லட்சுமி அழுது அழுது சிவந்த கண்களுடன் தன் ராமுவை எப்படியாவது காப்பாற்றுமாறு கடவுளிடம் வேண்டிக் கொண்டாள்.

ஆண்டியப்பன் இரவு நேரத்தில் ஆட்டை இழுத்துக் கொண்டு கங்காபுரம் செல்லுகையில் திடீரென மின்னல் மின்னி இடி இடித்து மழை பெய்யத் தொடங்கியது.

மழையில் நனையாமல் இருப்பதற்காக ஆண்டியப்பன் ஆட்டை இழுத்துக் கொண்டு ஓட முயற்சிக்கையில், இருட்டில் கண் தெரியாமல் கைப்பிடிச் சுவரற்ற ஒரு கிணற்றுக்குள் விழுந்து விட்டான். நல்ல வேளையாக, கிணற்றினுள் ஒரு மரத்தினுடைய உறுதியான வேர் நீட்டிக் கொண்டிருக்க அதை கெட்டியாகப்பிடித்துக்கொண்டு நீரில் மூழ்காமல் தப்பினான். "காப்பாற்றுங்கள்!" என்று கிணற்றுக்கு உள்ளிருந்தபடியே பல முறை கத்தியும், அவனுடைய குரல் வெளியே சிறிதும் கேட்கவில்லை. ஆனால் தன் எசமானின் நிலையை உணர்ந்த ராமு "மே" "மே" என்று உரக்கக் கத்திக் கொண்டே இரவு முழுவதும் அங்குமிங்கும் திரிந்தது.



பொழுது புலரும் நேரத்தில் ராமுவின் குரலைக் கேட்ட சில வழிப்போக்கர்கள் நின்று கவனிக்க, ராமு வேகமாக கிணற்றுக்கருகே ஓடி மீண்டும் கத்தியது. ஆட்டின் குட்டிதான் கிணற்றினுள் விழுந்து விட்டது என்று நினைத்து வந்தவர்கள், உள்ளே கத்தக் கூட சத்தமின்றி சோர்ந்திருந்த ஆண்டியப்பனைக் கண்டு அவனை அங்கிருந்து வெளியே தூக்கி வந்தனர்.

வெளியே வந்ததும் தன்னைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தபின், ஆண்டியப்பன் ராமுவை அன்புடன் தழுவிக் கொண்டு கண்ணீர் வடித்தான். உடனே, ராமுவை அழைத்துக் கொண்டு தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

இந்நேரம் ராமு பலியிடப்பட்டிருக்கும் என்று எண்ணி அழுது கொண்டிருந்த லட்சுமிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. "லட்சுமி! நான் என் முடிவை மாற்றிக் கொண்டு விட்டேன். உன்னுடைய ராமுவை உன்னிடமே அழைத்து வந்து விட்டேன். அது மட்டுமல்ல! இந்தத் தொழிலுக்கு இன்றுடன் ஒரு முழுக்குப் போடப் போகிறேன். நீ சொன்னதுபோல் பசுமாடு வாங்கிப் பால் வியாபாரம் செய்வோம்!" என்று கூறியதை அவளால் நம்பவே முடியவில்லை.

அவனுடைய முடிவிற்குக் காரணம் என்ன என்பது, பிறகு ஆண்டியப்பன் விளக்கிய பிறகே அவளுக்குப் புரிந்தது...... (முற்றும்)




- 1802 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.
- 1805 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் லிபியாவின் டேர்ன் நகரைக் கைப்பற்றினர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோசப் ஜோன்ஸ்டன் தலைமையில் கூட்டமைப்புப் படையினர் வட கரோலினாவின் டேர்ஹம் நகரில் கூட்டணியினரிடம் சரணடைந்தனர்.
- 1865 - அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.
- 1937 - ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினின் கேர்னிக்கா நகரம் ஜேர்மனியினரின் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் இடம்பெற்றது.
- 1954 - பிரெஞ்சு இந்தோசீனா, மற்றும் வியட்நாமில்வில் அமைதியைக் கொண்டுவரும் முகமாக ஜெனீவாவில் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1962 - நாசாவின் ரேஞ்சர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.
- 1964 - தங்கனீக்கா, சன்சிபார் இரண்டு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.
- 1981 - மட்டக்களப்பில் பட்டித்திடலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 16 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1986 - உக்ரைனில் செர்னோபில் அணுமின் உலையில் பெரும் விபத்து ஏற்பட்டது. உலகின் மிகப்பெரும் அணுவுலை விபத்து இதுவாகும்.
- 1994 - உச்சி குவார்க் (Top Quark) உபஅணுத் துணிக்கை ஒன்றைத் தாம் அவதானித்ததாக இயற்பியலாளர்கள் அறிவித்தனர்.
- 2005 - 29-ஆண்டுகால இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிரியா தனது 14,000 இராணுவத்தினரை லெபனானில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டது.

### பிறப்புகள்

- 1564 - வில்லியம் சேக்ஷ்பியர், ஆங்கில எழுத்தாளர் (இ. 1616)
- 1762 - சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ. 1827)

### இறப்புகள

- 1920 - சிறீனிவாச இராமானுசன், கணித மேதை (பி. 1887)
- 1897 - பெ. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி.1855)
- 1977 - **எஸ். ஜே. வி. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1898)**

### சிறப்பு நாள்

அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு தினம்

### எஸ்.ஜே.வி.செல்வநாயகம்



"தந்தை செல்வா" என்று வடக்கில் மட்டுமல்ல கிழக்கு மாகாண மக்களாலும் அன்பாகவும் மரியாதை உணர்வுடனும் அழைக்கப்படுபவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அல்லது எஸ். ஜே. வி. செல்வநாயகம். இவர் மார்ச் 31, 1898 மலேசியாவில் பிறந்தார்.

தந்தை செல்வா எனப் பல இலங்கைத் தமிழர்களால் குறிப்பிடப்படுபவர். அவர் இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான தலைவராவார். ஒரு குடிசார் வழக்கறிஞரான இவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் தலைமையின்கீழ் இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மூலம் அரசியலில் நுழைந்தார்.

மெல்லிய உருவமும், அமைதியான தோற்றமும், வயது முதிர்ந்த காலத்தில் அவர் முன்னெடுத்த தீவிர அரசியல் போராட்டமும் அவரை தமிழ் மக்களின் தந்தையாக எல்லோரும் மனதார விழிக்க காரணமாயிற்று.

இலங்கை விடுதலை பெற்ற பின்னர் அமைந்த முதல் அரசாங்கத்தில் சேர்வது மற்றும் இலங்கை இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டம் முதலியன பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து, வேறு சில தலைவர்களுடன் சேர்ந்து கட்சியை விட்டு விலகிய செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.

1957 இல் நெற்காணிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா என அழைக்கப்பட்ட இந்த மனிதர் எப்படி நடந்துகொண்டார்? சுருக்கமாகச் சொன்னால் இந்தச் சட்டமானது நிலமற்ற ஏழை மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினைத் தேடித்தரும் நன்நோக்கத்தினை மட்டுமே கொண்டிருந்தது.


இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டாட்சி அரசியல் முறையை வற்புறுத்தி வந்தார். 50 களின் இறுதிப் பகுதியிலும், 60, 70 களிலும், தனது கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் சென்றவர் இவர்.

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற முழுப் பெயர் கொண்ட கிறிஸ்தவரான செல்வநாயகம், 90% க்கு மேல் இந்துக்களைக் கொண்ட காங்கேசன்துறை நாடாளுமன்றத் தொகுதியில் நீண்ட காலம் தொடர்ச்சியாக வெற்றிபெற்றுவந்தது அவரது தலைமைத்துவத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2014-14.05.2014



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**பிரச்சினைகளிலிருந்து விலக பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ள வேண்டிய நேரம்!**
**வசீகரப் பேச்சால் அனைவரையும் வசமாக்கும் துலாம் இராசிநேயர்களே!**

### பிரச்சினைகளில் இருந்து விடுபட பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளுங்கள்

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆரா ய்ந்து பார்க்கிற பொழுது, வரவைக் காட்டிலும் செலவு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு திகைக்க வைக்கும் திடீர் மாற்றம் ஏற்படும்.

செவ்வாயின் வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. தனாதிபதியாக விளங்கும் செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் சம்பாத்தியம் அனைத்தும் செலவாகி சஞ்சலத்தைக் கொடுக்கும்.

இன்பங்களை மட்டுமே சந்திக்க வேண்டுமென்று நினைத்திருந்த உங்களுக்கு இம்மாதம் ஜென்மச் சனியின் வக்ரமும், செவ்வாயின் வக்ரமும் உண்மையிலேயே உள்ளத்தில் பலவிதமான சஞ்சலங்களை உருவாக்கும். தெள்ளத் தெளிவாக முடிவெடுக்க இயலாது. நல்லவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பதன் மூலம் நன்மைகளை நீங்கள் வரவழைத்துக் கொள்ள இயலும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இம்மாதத் தொடக்கத்தில் சூரியனும், சனியும் பார்த்துக் கொள்கிறார்கள். எனவே, காரியங்கள் அனைத்தும் மெதுவாகவே நடைபெறும். என்றாலும், அதைக் கவனமுடன் பார்த்துக் கொள்ளாவிட்டால் விரயங்களை சந்திக்க நேரிடும். நவக்கிரக வழிபாடு நன்மைகளை வரவழைத்துக் கொடுக்கும்.

சனி, சுக்ர பரிவர்த்தனை ஓரளவு யோகங்களை வழங்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாக வள்ளல்களின் ஒத்துழைப்பு கடைசி நேரத்திலேயே கிடைக்கும். வங்கிகளில் எதிர்பார்த்த சலுகைகள் வருவதில் தாமதம் ஏற்படலாம். புதன் நீச்சம் பெற்று மாதத் தொடக்கம் அமைந்தாலும், மாதத் தொடக்கத்திலேயே புதன் சூரியனுடனும், கேதுவுடனும் இணைகின்றார்.

லாபாதிபதி சூரியனுடன் விரயாதிபதி புதன் இணையும் இந்த நேரம் எவ்வளவு வருமானம் வந்தாலும் குடும்பச் செலவு கூடிக்கொண்டேபோகும். இதுபோன்ற காலங்களில் மாருதி கவசம் பாடி அனுமனை வழிபாடு செய்வது நல்லது. வெற்றிகள் வந்து குவிய வெற்றிலை மாலை சூட்டுங்கள். வாழ்க்கைப் பாதை சீராக வடை மாலை அணிவியுங்கள்.

**மேஷ புதன், இடப புதனின் சஞ்சாரம்!**

மாதத் தொடக்கத்தில் மேஷத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, கூடுதல் விரயங்களை சந்திக்க நேரிடும். கூட்டாளிகள் விலகுவர். அலைச்சலும், பயணங்களும் அதிகரிக்கும். அதே நேரத்தில் மே 1ஆம் திகதி இடபத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார்.

இதன் விளைவாக விபரீத ராஜயோகம் செயற்படப் போகிறது. திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லலாம். திட்டமிடாத காரியங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகம், தொழிலில் உன்னத நிலை காண்பீர்கள். பண வரவு கூடுதலாகவே இருக்கும் நேரமிது.


**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

ராசிநாதனாகவும், 8இற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் உச்சம் பெறும் நேரமிது. அந்த நிகழ்வு ஏப்ரல் 28 ஆம் திகதி நிகழவிருக்கிறது. எனவே, புத சுக்ர யோகத்தின் அடிப்படையில் நினைக்க இயலாத ராஜயோகத்தை வழங்கப் போகிறது. எதிர்பாராத தன லாபம் இல்லம் தேடி வரும். ஏதேனும் புதிய தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும். . மக்கள் செல்வங்களால் பெருமைகளும் வந்து சேரும். தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் கூட்டாக சேருவதற்கு முன்வருவர். இம்மாதம் உமா மகேஸ்வரர் வழிபாடு உள்ளத்தில் மகிழ்ச்சியை நிலைநிறுத்தும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

எதிர்பார்ப்புகள் நிறைவேற எல்லோரையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வாரிசுகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். சுக்ரப் பெயர்ச்சிக்குப் பின்னால் சொல்லைச் செயலாக்கிக் காட்ட இயலும். செவ்வாய் வக்ர நிவர்த்திக்குப் பிறகு சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். ராகு-கேது பிரீதிகளை மேற்கொண்டால் நன்மைகளை வழங்கும். ஜென்மச் சனி விலகும் வரை கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**உதிரி வருமானங்கள் பெருகி உள்ளம் மகிழும் நேரம்!**
**வாக்கு வல்லமையால் அனைவரையும் வசமாக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

### உதிரி வருமானங்கள் பெருகி உள்ளம் மகிழும் நேரம்!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. எனவே. பண வரவு திருப்தியாக இருக்கும். பார்க்கும் தொழிலில் லாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூட்டாளிகள் உங்கள் எண்ணங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவர். ராசிநாதன் செவ்வாயோடு சந்திரன் இணைந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும்.

சுக்ர. சனி பரிவர்த்தனையால் பயணங்கள் அதிகரிக்கும். பழக்க வழக்கம் விரிவடையும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாகன யோகத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு ஆசைகள் நிறைவேறும்.

ஏழரைச் சனியில் தற்சமயம் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் சனி இப்பொழுது வக்ர இயக்கத்தில் இருப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். அன்னிய தேசத்தில் இருந்து அனுகூல செய்திகள் வந்து சேரும். ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தால் பூர்வீகச் சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு மகிழ்ச்சிக் கடலில் திளைத்தாலும் செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருப்பதால் மே 10ஆம் திகதி வரை உடல் நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. அருகம்புல் மாலையிட்டு ஆனைமுகப் பெருமானை வழிபட்டு வருவதோடு வடிவேலனையும், வடக்கு நோக்கிய அம்பிகையையும் வழிபட்டு வாருங்கள். ஏழரைச் சனிக்குப் பரிகாரமாக சனிக் கிழமைதோறும் சனி கவசம் பாடி சனி பகவானை வழிபடுவதோடு அனுமனையும் வழிபட்டு ஆனந்தத்தையும் வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**மேஷ புதன், இடப புதனின் சஞ்சாரம்!**

மாதத்தொடக்க நாளிலேயே மேஷத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். எட்டிற்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படப்போகிறது. எனவே, ஜய ஆண்டின் தொடக்கமே உங்களுக்கு ஜெயத்தை வழங்கப் போகிறது. பயத்தை அகற்றப் போகிறது. வெற்றி வாய்ப்புகள் படிப்படியாக வீடுதேடி வரப்போகின்றது.

மே 1 ஆம் திகதி முதல் இடப புதனின் சஞ்சாரத்தால் மேலும் நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரப்போகின்றன. மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். வாகன மாற்றச் சிந்தனை மேலோங்கும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுகது அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 28 ஆம் திகதி மீன ராசியில் உச்சம் பெறப் போகிறார். எனவே, வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். அவர்களின் வேலை வாய்ப்பு, வெளிநாட்டு முயற்சி, தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க செய்திகள் வந்து சேரும். வெளி நாட்டிலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா? என்று பரிசீலனை செய்வீர்கள். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருதெட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாகவே அமையப் போகிறது. உறவினர்களின் வருகை அதிகரிக்கும். உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். செல்வந்தர்களின் ஒத்துழைப்போடு சிறப்பான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும். தாய்வழி ஆதரவு பெருகும். கணவன்-மனைவிக்குள் பாசம் கூடும். ஆசைப்பட்ட ஆபரணங்களை வாங்கி, அணிந்து மகிழ உச்ச சுக்ரனின் ஆதிக்கம் கைகொடுக்கிறது. இந்த மாதத்தில் சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வாருங்கள். சனி பகவான் சன்னிதியில் தீபம் ஏற்றுங்கள். நல்லகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்ன நடக்கும் இலங்கையில்?

## -சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் ராமு மணிவண்ணன்-

ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில், இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேறிவிட்ட சூழலில், உலகெங்கிலும் உள்ள முக்கியமான 16 தமிழ் அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்து, உலக நாடுகளிடம் அவை மீதான தடையையும் கோரியிருக்கிறது இலங்கை அரசாங்கம்!

அத்துடன், இலங்கைக்குள் விடுதலைப்புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முயன்றதாக நெடுங்கேணிப் பகுதியில் கோபி, அப்பன், தேவிகன் ஆகிய மூவரைச் சுட்டுக்



கொன்றிருக்கிறது.

சர்வதேச அழுத்தங்கள் வெறும் பேச்சளவில் உருவானதுமே, இலங்கையில் இருக்கும் நிராயுதபாணி தமிழர்களையும் விதவிதமாக வதைக்கத் தொடங்கி விட்டது இலங்கை அரசு.

இது 2006 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய போராகப் பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பொது நிர்வாகத் துறையின் பேராசிரியரும் தலைவருமான ராமு மணிவண்ணன், ஈழத்தமிழ் படுகொலைக்கான ஆதாரங்களை Srilanka: Hiding The Elephant என்ற நூலில் 1000 பக்கங்களுக்கு அடுக்கியிருக்கிறார்.

கடந்த மூன்று வருடங்களாக இலங்கை தொடர்பான ஐ.நா. அமர்வுக்குச் சென்று வரும் ராமு மணிவண்ணன் இது தொடர்பாக தெரிவித்ததாவது, நான் தொடர்ந்து ஈழத்துக்குச் சென்று வருபவன். கொத்துக்குண்டுகள் பற்றிய செய்திகள் வருவதற்கு முன்னரே, அதன் விளைவுகளை அங்கு நேரில் கண்டவன். ஆதலால், 2008 ஆம் ஆண்டு இறுதியில் இருந்தே இந்த நூலுக்கான தயாரிப்புப் பணிகளைத் தொடங்கி விட்டேன்.

அப்போது முதல் இப்போது வரை இறுதிப் போரில் காணாமற்போன குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என அந்தப் பயங்கரத்தின் நிழலையும் நிஜத்தையும் இந்த நூலில் தொகுத்திருக்கிறேன்.

இறுதிப்போரின் முடிவில் பிடிபட்ட இளம் பெண்களை, சுமார் 60 பேருந்துகளில் ஏற்றிச் சென்றது இலங்கை இராணுவம். அந்தப் பேருந்துகளோ, அதில் பிடித்துச் செல்லப்பட்டவர்களோ என்ன ஆனார்கள் என இன்று வரை தெரியவில்லை.


இந்த மாபெரும் இனப்படுகொலையை, போர்க்குற்றம் என்றும் மனித உரிமை மீறல் என்றும் உலகம் விவாதித்துக் கொண்டிருந்த சமயத்தில், இல்லை இது அப்பட்டமான இனப்படுகொலை என்று உலகுக்கு உணர்த்த, போர் நடந்த விதம், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கொல்லப்பட்ட மக்கள் என இந்த இன அழித்தொழிப்பு தொடர்பான முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் இந்த நூலில் தொகுத்திருக்கிறேன்.

இனிமேலாவது ஐ.நா. மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதேனும் நிவாரணம் கிடைக்குமா?

2009 இல் போர் முடிந்த போது இலங்கை அரசைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை இந்தியாவின் ஆதரவோடு நிறைவேற்றியது ஐ.நா.

பின்னர், 2012 ஆம் ஆண்டு இலங்கை அரசே தன் பிரச்சினைகளை விசாரித்துத் தீர்த்துக் கொள்ளும் விதத்தில் L.L.R.C எனும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பை வழங்கியது.

2013 ஆண்டு L.L.R.C விசாரணையிலும் மனித உரிமை தொடர்பான விசாரணைகளிலும் முன்னேற்றம் இல்லை என்று அறிவித்தது.



ஐ.நாவின் மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை, இலங்கைக்கே நேரடியாகச் சென்று சூழலை ஆராய்ந்து அறிக்கை கொடுத்தார்.


இப்போது (2014 இல்) சர்வதேச விசாரணை தேவை என ஐ.நா. மனித உரிமை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஓர் இனப்படுகொலையை வேடிக்கை பார்த்த சர்வதேச சமூகம், தமிழர்களின் பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்க ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினை, படிப்படியாக சர்வதேச சமூகத்தின் கைகளுக்குச் சென்று விட்டது.

இந்தத் தீர்மானங்கள் இன்னும் வலுவாக வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை ஆனால், ஐ.நா.நடவடிக்கைகளால் நன்மையே இல்லை என்று சொல்லி விட முடியாது!

ஆனால், இதுவரை வெளிவந்த ஐ.நா. அறிக்கைகள் போர்க்குற்றம், மனித உரிமை



என்றுதான் பேசுகிறதே தவிர, எங்குமே இனப்படுகொலை என்ற வார்த்தையைக் கூடப் பயன்படுத்தவில்லையே?

போர் முடிந்த புதிதில் அயர்லாந்தில் நடந்த மக்கள் தீர்ப்பாயத்தில் போர்க்குற்றம், இனப்படுகொலை என்றுதான் பேசினார்கள். ஆனால், உறுதியான ஆதாரங்கள் வெளிவந்த பின்னர், ஜேர்மனியில் நடந்த மக்கள் தீர்ப்பாய மாநாட்டின் முடிவில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்று அறிவித்தார்கள்.

இந்த நிலையில் நாம் ஐ.நா. தீர்மானத்தை இனப்படுகொலை என்று திட்டவட்டமாக வரையறுக்கப் போராட வேண்டுமே தவிர, ஐ.நாவே வேண்டாம், அமெரிக்கா எந்த நன்மையும் செய்யாது என்று பிரச்சினையைத் திசை திருப்புவது குழப்பும் வேலையாகப் படுகிறது.

தொடர்ந்து போராடுவதன் மூலம் மட்டுமே சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து, ஈழத் தமிழர்களுக்குத் தேவையான அரசியல் தீர்வினைப் பெற முடியும்.

செப்ரெம்பர் மாதத்தில் இருந்து இலங்கை மீதான விசாரணைக்குரிய ஆயத்தப் பணிகள் தொடங்கும் என நம்புகிறேன்.

இந்த விசாரணைகளுக்கு, இலங்கை அரசு உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் வரும் என எதிர்பார்க்கலாம். ஐ.நா. போன்ற அமைப்புகளால் மட்டுமே அது சாத்தியமாகும்!

ஆனால், எண்ணெய் வளமோ, சுரண்டக் கூடிய வேறு வளங்களோ இல்லாத இலங்கை மீது அமெரிக்காவுக்கோ, மேற்கு உலகுக்கோ என்ன அக்கறை இருக்கும் என்று எதிர்பார்க்க முடியும்?

தெற்கு ஆசியாவின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு இந்தியாவின் பங்கு முக்கியமானது. ஆனால், ஆசியாவில் தன்னை ஒரு சூப்பர் பவர் ஆக நிறுத்திக் கொள்ள இந்தியா எதையுமே செய்யவில்லை.

குறிப்பாக, இலங்கை விவகாரத்தைத் தவறான கண்ணோட்டத்துடன் அணுகுகிறது.

13 ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் ஈழத் தமிழர்களுக்கான குறைந்தபட்ச தீர்வைக் கூட பெற்றுக் கொடுக்காமல், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தோம்... கழிப்பிடம் கட்டிக் கொடுத்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையை தனது பிராந்திய நலன் களுக்கு ஆதாயமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சீனா, இந்துமா சமுத்திரம் முழுக்க தன் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது.

என்னைப் பொறுத்தவரை அமெரிக்கா என்று இல்லை, ரஷ்யா இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்தாலும் அதை ஆதரிப்பேன். நமக்குத் தேவை நீதி. அது யார் மூலம் கிடைத்தால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசினோ சூதாட்ட சட்ட மூலத்திற்கு எதிரானவர்கள் அமைதி காப்பது ஏன்?

## சபையில் மங்கள சமரவீர எம்.பி.கேள்வி



(கொழும்பு)

**கசினோ சூதாட்ட சட்ட மூலத்திற்கு எதிரானவர்கள் அமைதியாக இருக்கின்ற நிலையில் அரச தரப்புக்குள் இருக்கின்ற முஸ்லிம் உறுப்பினர்கள் அதிகமாகப் பேசி ஆவேசமாக குரலெழுப்புகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.மங்கள சமரவீர சபையில் தெரிவித்துள்ளார்.**

செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான கட்டளை தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலை திருத்தங்களுக்கு உட்படுத்துவதா தவிர்ப்பதா என்பது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமர்வின் போது கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் இரு தரப்புக்குமிடையில் வாதப்பிரதிவாதங்களும் சர்ச்சை நிலையும் எழுந்திருந்தன.

வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டுள்ள விடயங்களை திருத்தங்களுக்கு உட்படுத்த முடியுமென ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமது வாதங்களை முன்வைத்த அதேவேளை கசினோ சூதாட்ட விடயம் இதில் உள்ளடக்கப்பட்டிருப்பதாலேயே அரசு திருத்தங்களுக்கு மறுக்கிறது என்றும் குற்றம் சாட்டிப்பேசினர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வாதங்களின் போது ஆளும் கட்சியைச் சேர்ந்த ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் பிரதியமைச்சர் பைசல் முஸ்தபா ஆகியோர் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி மேற் குறித்த வர்த்தமானி அறிவித்த லுக்கு ஆதரவாக குரல் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியின் சார்பில் வேறு எவரும் குரல் எழுப்பவில்லை. அமைச்சர்கள் சிரேஷ்ட அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் அமைதியாகவே இருந்தனர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் மங்கள சமரவீர எம்.பி.கூறுகையில்,

கசினோ சூதாட்டத்துக்கு எதிரானவர்கள் ஆளும் கட்சி பக்கத்தில் அமைதியாகவே இருக்கின்றனர்.

எனினும் இங்கு முஸ்லிம் உறுப்பினர்களே கசினோவுக்கு ஆதரவாகவும் ஆவேசமாகவும் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

இதனையடுத்து அஸ்வர் எம்.பியும் பிரதியமைச்சர் பைசல் முஸ்தபாவும் மங்கள சமரவீர எம்.பிக்கு எதிராக கூச்சலிட்டு ஏதோ கூறினர்.

இதேவேளை, இங்கு பின்னர் உரையாற்றிய ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பியான விஜித ஹேரத் கூறுகையில்,

கசினோ சூதாட்டம் இஸ்லாமிய சட்டத்துக்கு எதிரானதாகும். இவ்வாறிருக்கையில் இங்கு முஸ்லிம் எம்.பிக்களே கசினோவுக்கு ஆதரவாக குரலெழுப்புவது கவலைக்குரிய விடயமாகும் என்றார். (2)

# வில்பத்து குடியேற்றம் குறித்து நீதிமன்றில் வழக்குப்பதிவு

(கொழும்பு)

மன்னார் - மறிச்சிகட்டி, மரைக்கார்தீவு மக்கள் வில்பத்து வன பகுதியில் அத்துமீறிக் குடியேறியுள்ளதாக தெரிவித்து வன பரிபாலன சபையினால் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நீதிமன்ற விசாரணைகள முதற்தடவையாக மன்னார் மாவட்ட நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

இதில் மரைக்கார்தீவைச் சேர்ந்த 10 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மரைக்கார்தீவு மக்களுக்கு உரித்தான காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், முசலி பிரதேச செயலாளர் எழுத்துமூலம் அனுமதி வழங்கி அடையாளப்படுத்திய காணிகளிலேயே மேற்படி மக்கள் 2010 ஆம் ஆண்டு முதல் தற்காலிகக் கொட்டில்கள் அமைத்து வாழ்ந்து வருகின்றார்கள்.

பொதுநோக்கு மண்டபம், பொதுக் கிணறுகள் என்பன அமைக்கப்பட்டுள்ள குறித்த காணியை மரைக்கார்தீவு மக்கள் தமது பூர்வீகக் காணி என உரிமை கூறுகின்றனர்.

எனினும் வன பரிபாலன திணைக்களம், இக்காணி வில்பத்து சரணாலய எல்லைப்பகுதி என உரிமை கோருகிறது.

இந்நிலையில் குறித்த விடயம் நீதிமன்றில் எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றது என்பது தொடர்பில் பலரும அவதானம் செலுத்தியுள்ளனர். (2)

# சர்வதேச இளைஞர் மாநாட்டிற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச இளைஞர் மாநாட்டுக்காக 500 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இதற்கான 250 மில்லியனை அரசாங்கமும், 250 மில்லியனை தனியார் நிறுவனங்களும் வழங்கவுள்ளதாக பிரதிக் கல்வி அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர் வரும் மே மாதம் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையில் சர்வதேச இளைஞர் மாநாடு நடைபெறவுள்ளது.

இளைஞர் மாநாட்டுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் 200 பிரதிநிதிகளும், 150 நாடுகளிலிருந்து 550 பிரதிநிதிகளும பங்கேற்கவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிடுள்ளார். (2)

# குற்றச்செயல்களுக்கு அரசு இடம் கொடுக்கிறது

குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு தேவையான பின்னணியை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுப்பதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாலியல் வன்கொடுமை, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பயன்பாடு போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் சட்டங்களை இயற்றி வருகின்றது.

கசினோ சூதாட்ட சட்டம் மிகவும் ஆபத்தானது. மக்கள் புத்தாண்டு கொண்டாட்ட மனோநிலையில் இருக்கின்ற போதே கசினோ சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கப்படுகின்றது.

இந்தச்சட்டம் மிகவும் ஆபத்தானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

## இரு மருத்துவர்கள்

ஒருவர் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். அவருக்கு இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகமாகி விட்டது என்று டாக்டர் சொல்லிவிட்டாராம்.

அதனால் டாக்டரின் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு, தேகப்பயிற்சியெல்லாம் செய்து கொண்டு வந்தார். ஓரளவு குணமடைந்தார்.

அந்தச் சமயத்தில் ஊரிலிருந்து ஒரு பாட்டி வந்தார். இவர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்து என்னவிடயம் என்று கேட்டறிந்து கொண்டார்.

டாக்டர் சொல்லியபடியே எல்லாவற்றையும் செய். அத்துடன் நான் ஒரு வைத்தியம் சொல்கிறேன் அதையும் செய் என்று சொன்னார் அந்தப்பாட்டி.

பாட்டி வைத்தியமா?

சரி சொல் என்று அரை மனதுடன் கேட்டார் இவர். வேறொன்றுமில்லை. பச்சை வெங்காயம் இருக்குதல்லவா அதில் தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டுவா என்றார்.

பாட்டி சொல்லைத் தட்டக்கூடாது என்பதற்காக இவரும் தினமும் ஒரு வெங்காயத்தை சாப்பிட ஆரம்பித்தார். பாட்டி வைத்தியத்தின் பலனை அதன் பின்னர் தான் உணர ஆரம்பித்தார்.

உணவுக் கட்டுப்பாடுகளாலும் தேகப்பயிற்சியினாலும் எந்தளவுக்கு குணம் தெரிந்ததோ அதைப்போல் இரண்டு பங்கு குணம் இந்த வெங்காயத்தில் தெரிந்ததாம். வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் வீட்டில் இருந்தால் இரண்டு டாக்டர்களே வீட்டில் இருப்பது போல் நாம் நினைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது மருத்துவ நிபுணர்கள் பலர் ஆராய்ச்சி செய்து பல விபரங்களைக் கூறியிருக்கிறார்கள்.

இதயநோய்கள், புற்றுநோய், இரத்தநாளம் கடினமாதல், ஜலதோஷம், இரத்த அழுத்தம் இப்படியான பல நோய்களுக்கு இவையிரண்டும் கை கண்ட மருந்தாக உபயோகப்படுகிறதாம்.

அதுசரி... வெங்காயத்துக்கும் வெள்ளைப் பூண்டிற்கும் நோயைத் தடுக்கும் அல்லது குணப்படுத்தும் சக்தி எங்கிருந்து கிடைக்கிறது?

அவற்றில் அலிஸின் என்ற எண்ணெய்ச்சத்து இருக்கிறது. ஒரு மாதிரியாக எரிச்சலூட்டும் நெடியைக் கொடுப்பது இது தான். 1885 ஆம் அண்டு லூயி பாஸ்டர் என்ற விஞ்ஞானி வெள்ளைப்பூண்டுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தார்.

அமெரிக்க மருத்துவ நிபுணரான டாக்டர் ரூத்லாங் பல ஆராய்ச்சிகள் செய்து இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பவர்கள் சாப்பாட்டில் வழக்கமாக வெள்ளைப்பூண்டு பயன்படுத்திக் கொண்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும் என்று கூறியுள்ளார்.

இரத்தம் இறுகிப் போகாமல் தடுக்கும் சக்தி வெங்காயத்திலும் வெள்ளைப்பூண்டிலும் இருக்கிறது என்று ஜப்பான்,ஜேர்மன் நாடுகளில் நடந்த ஆராய்ச்சிகள் மூலமாக நிருபணமாகியிருக்கிறது.

எல்லாவற்றையும் விட முக்கியமாக புற்றுநோயை தடுப்பதற்கும் பூண்டு உபயோகப்படும் போலிருக்கிறது.

நமது உடம்பில் இருக்கும் நல்ல திசுக்களை புற்றுநோய் திசுக்களாக மாற்றுவது கார்சினோஜன் என்ற இரசாயனப்பொருள். அது உருவாவதை இந்தவெள்ளைப் பூண்டு தடுத்தி நிறுத்தி விடுகிறதாம். ஆனால் அது எப்படி என்பதை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

வெங்காயத்தில் இருக்கும் செலினியம் என்ற சத்து இரைப்பையில் வரும் புற்றுநோயையும் ஏனைய புற்று நோய்களையும் தடுத்து நிறுத்தி விடுகிறது என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைத்தவிர வெங்காயத்தில் இருக்கும் கந்தக சத்து நோயெதிர்ப்பு சக்தியாகவும் பயன்படுகிறது.

நம் வீட்டுக்குள் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் பாட்டியின் வைத்தியத்தை நாம் நம்ப வேண்டுமானால் பல நிபுணர்களெல்லாம் ஆராய்ச்சி செய்து நிரூபிக்க வேண்டியிருக்கிறது. அந்தளவுக்கு நம் பாட்டி மீது நமக்கு நம்பிக்கை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய சூழலுக்கிணைவான பசுமை தொழில்நுட்பங்கள்-3

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நீரின்றி இவ்வுலகம் ஏது ?

இயற்கையை நம்பிய விவசாயமும் எமது வாழ்க்கையும் பலதடவைகளில் விஞ்ஞானத்தினால் கூட எதிர்வு கூற முடியாமல் மாறிவிடுகின்றது. மனித வாழ்க்கை இந்த அடிப்படையிலேயே தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது. உலகநாடுகளில் செவ்வாய்க்கும் சூரியனுக்கும் விண்கலத்தை அனுப்பிய நாடுகளினாலும் மறைந்த மலேசிய விமானத்தை இன்னபங்களிப்பைச் செய்த இன்னும் செய்கின்ற ஆய்வாளர்களை குறைகாண முன்னர் ஒவ்வொருவரும் தாங்கள் என்ன விடயத்தை சாதித்திருக்கின்றார்கள் என்பதை சற்றேனும் விளக்கினால் அது நன்றாக இருக்கும். வாருங்கள் கூடியிருந்து அலசியாராய்ந்து பார்ப்போம்.

வளர்ந்த நாடுகளில் காணப்படும் பல்கலைக்கழகங்களிலுள்ள வசதி வாய்ப்புக்கள் இங்கில்லை. வசதியைப் பெருக்கவும் வழி கிடைக்கவில்லை. தடைக்குமேலாக தடைபகுதிகளில் பெய்த சிறுமழை கூட யாழ்ப்பாணக் குடாநாட்டிலில்லை. ஒவ்வொரு நாளும் மேகம் கறுத்து வானம் இடித்துவிட்டு இன்று போய் நாளை வருகிறேன் என்கிறது. வானம் பொய்த்து பூமி கருகி குளங்கள் வற்றி மீனினங்கள் பெருமளவில் இறக்கும் வரை அதற்கான காரணத்தை நாம் ஏன் முன்கூட்டியே யோசித்திருக்கவில்லை. பலவிடங்களில் மரங்கள் கருகத் தொடங்கியிருக்கின்றன. நம்பிக்கை தரும் வேப்பமரம் கூட கடந்த மூன்று வருடங்களாக கருகத்தொட



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 50-II

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மும் கண்டுபிடிக்க முடியவில்லை. காலநிலை மாற்றத்தை சரிவர கணிக்க முடியவில்லை. இயற்கை அனர்த்தங்களை எதிர்வு கூற முடியவில்லை. எது சரி எது பிழை என்பதை நாம் இன்னுமே சரியாக கணக்கிட்டுக் கொள்ள திராணியற்றிருக்கின்றோம். எமது பிரதேசத்தில் தற்போது நிலவும் சூழ்நிலை இதற்கெல்லாம் சிறந்த உதாரணம். நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்ன செய்யப் போகின்றோம் என்பதனை பொது நோக்கில் நீண்டகால நிலைப்பாட்டில் ஆற இருந்து கலந்தாலோசித்தால் காலநிலையின் மாற்றத்தின் விளைவுகளுக்கு நிச்சயமாக பதிலிருக்கும். முப்பது வருடகால நீண்ட போராட்டத்தில் அருமை பெருமையாக கிடைத்த சிறிய வசதிவாய்ப்புக்களை வைத்துக் கொண்டு எமது இந்த துன்பப்பட்ட பூமியில் ஆய்வு செய்து விஞ்ஞானத்தின் நீரோட்டத்திற்கு பங்களித்தவர்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதைவிடுத்து பொதுப்படையாக ஆய்வாளர்களை விமர்சிப்பது இம்மண்ணையே வாசஞ்செய்து இம்மண்ணிலேயே தமது வாழ்க்கையை கழிக்க எண்ணி இம்மணணிற்காகவே தம்மை அர்ப்பணித்த ஆய்வாளர்களை துன்பப்பட வைத்துவிடும். துன்பப்பட்ட இப்புனித மண்ணை விட்டு பல கல்வியியலாளர்கள் பசுமைதேடி ஓடியிருக்கும் நிலையில் இங்கிருந்து தமதுகள் இந்த மூன்று தசாப்தத்திலும் இருந்தது இதற்கு காரணம். எமது நாட்டிலேயே தென் பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களிலுள்ள ஆய்வு கூட வளங்களை விட மிகவும் குறைந்த அளவில் தக்கன பிழைப்பதாக வாழ்ந்த நிலையில் செய்யப்பட்ட ஆய்வுகளையும் ஆய்வாளர்களையும் யுத்தம் முடிந்து பசுமை வந்தவுடன் முதுகில் குத்திக் காட்டுவது அவர்களின் முயற்சியை மழுங்கடிப்பதாகவே இருக்கும். வடபகுதிக்கு வெளியே விருத்தியடைந்த ஆய்வுகூடங்களில் செய்த ஆய்வுகளை இங்கு செய்ய முடியாததற்கு இங்கு அதற்கான அவ்வளவு வசதியுள்ள ஆய்வுகூடங்களில்லாதிருப்பதுதான் காரணம். அங்கு படித்து ஆய்வு செய்து இங்கு வந்து விரிவுரையாளர்களாக இருக்கும் அனைவரையும் விசாரித்தால் இந்த உண்மை புரியும். அதற்காக அவர்கள் ஆய்வு செய்யவில்லையென்றோ அல்லது ஆய்வு செய்வதற்கான தகுதியில்லையென்றோ கருதலாகாது. வசதி வாய்ப்புக்களை நாமே தேடி அதனைப் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். இம் மண்ணில் உள்ள ஆய்வாளர்கள் அனைவரும் சிறப்பு தகுதியுடையவர்கள். அவர்களை முதலில் மதிக்கவும் மரியாதை செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தை அரசியலாக்க கூடாது. ஆனால் அரசியலை அரசியல் விஞ்ஞானமாக்கலாம். வடபகுதி தற்போது நீரின்றி உழன்று கொண்டிருக்கின்றது. வடபகுதியின் ஏனையங்கியிருக்கின்றது. வளிமண்டல வெப்பத்தை தாங்க முடியவில்லை. இதனால் பலருக்கு சுவாசமுட்பட்ட நோய்கள் வந்திருக்கின்றது. என்னளவிலேயே இந்த அதிஉஷ்ண காலத்தில் ஆஸ்துமா நோயின் தீவிரத்தை உணர்ந்து உழன்றிருக்கின்றேன். தொண்டைமானாற்றில் திடீரென கடல் வற்றி மீனினங்கள் இறந்ததை பார்த்த போது மனம் சுருக்கென்றது. நமது தொண்டை க்குழியில் உள்ள உயிர் ஊசலாட தொடங்கி யிருக்கின்றது என்பதனை தொண்டைமானாற்றை நல்ல உதாரணமாகக் கொண்டு கணிப்பிடலாம். உயிர்விட முடியாமல் அங்கே மீன்களின் பரம்பரையே அழிந்திருக்கின்றது. ஒட்சிசன் குறைவும் நீரிலிருந்த உப்பின்செறிவும் இதற்கு காரணம். இன்று மீன்களுக்கு நாளைக்கு எங்களுக்கு! அனைத்தும் புரிந்த உலகளவும் தெரிந்த எம்மவர்களுக்கு இதுகூடவா புரியவில்லை. சுனாமி வந்து கிழக்குக்கரையை துவம்சம் செய்த போது அவர் இவர் என்று பிரித்து பார்த்தா இழுத்துச் சென்றது? பல உயிர்களை காவு கொடுத்த குடும்பங்கள் இன்றும் அந்த சோகத்திலிருந்து மீள முடியாமல் தத்தளிப்பதை நாம் இன்னமும் கருத்தில் கொள்ளவில்லை. சோகமுள்ளவருக்கு தானே அதன் வேதனையும் தாக்கமும். மீண்டும் இப்படியொரு அவலம் எம்மண்ணிற்கு வரக் கூடாது என்பதைப்பற்றி ஆலோசிப்பதை விட்டுவிட்டு அதற்கான திட்டங்களை தீட்டுவதை விட்டு விட்டு நீரை வைத்து அரசுகள் முரண்படக் கூடாது. வானத்தி லிருந்து இம்மண்ணிற்கு வரும்வரை மழையாக வந்த எந்த ஒரு நீர்த்துளிக்கும் எந்த அரசியலும் தெரியாது. நிறமின்றி நீர் இருப்பதற்கு காரணமே வேற்றுமைகளிருக்க கூடாதென்பதற்காகவே. மதம், இனம். சாதி, மொழி என்பவற்றிற்கும் அப்பால் பொதுவானது நீர். தண்மையை குறைப்பதால் அதற்கு தண்ணீர என்று பொருள். இலவசமாக வந்த நிறமற்ற நீரை போத்தலில் அடைத்து நிறமும் கொடுத்து இருந்த சுகத்தையும் கெடுத்துக் கொள்கின்றார்கள். ஆனால் இங்கு நீர் வெந்நீர் ஆகியிருக்கின்றது. வளிமண்டல உஷ் ணத்தை விட இங்குள்ள மறவர்களின் சொல்லம்பு உஷ்ணத்தை தாங்கமுடியாது இம்மண்ணிலிருந்து விரைந்து நீர் ஆவியாகி போனதால் தொண்டைமானாற்றில் இந்த அவல நிலை. அதுவும் தொண்டை மாணாறு வெளிக்கள நிலையம் அமைந்திருக்கும அயலிலேயே இந்த துன்பநிகழ்வு நடந திருக்கின்றது. இந்த நிலையத்தை சூழலியல் ஆய்வுக்கான நிலையமாக மாற்ற வேண்டும். நீர் பற்றிய ஆய்வுக்கு இன்னும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். (தொடரும்)

# சிறுநீரக சிகிச்சை அறிக்கையை கோருகிறது சுகாதார அமைச்சு

நாட்டில் தனியார் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுநீரக இணைப்பு மற்றும் அகற்றம் தொடர்பில் அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சிறுநீரகம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார பணிப்பாளர் நாயகம் பாலித மஹீபால தனியார் வைத்தியசாலை அபிவிருத்தி பிரிவிற்கு அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதியல் இந்நாட்டின் தனியார் வைத்தியசாலைகளில் செய்யப்பட்டுள்ள சிறுநீரக இணைப்பு மற்றும் அகற்றம் குறித்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இலங்கையை மையப்படுத்தி சிறுநீரக மோசடி செய்யப்பட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த மோசடியில் இலங்கை வைத்தியர் ஒருவருக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை சுகாதார திணைக்களம் தனது கவனத்தை செலுத்தியுள்ளது. இதேவேளை இலங்கையில் சிறுநீரக விற்பனை இடம்பெற்றமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இந்திய பொலிஸார் உத்தி யோக பூர்வமாக அனுமதி கோரினால் அதற்கு இடமளிக்கப்படும் என்று இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணைக்காக இந்திய பொலிஸ் குழு ஒன்று இலங்கை செல்லவுள்ளதாக நேற்று இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகி யிருந்தது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (2)

# புத்தரின் உருவத்தை பொறித்தவர்களை நாடு கடத்துவது பொருத்தமற்றது

## அமெரிக்க சங்கநாயக்க தேரர் தெரிவிப்பு

புத்தரின் உருவத்தை பச்சை குத்திய வெளிநாட்டு பிரஜைகளை நாடு கடத்துவது சரியானதல்ல என அமெரிக்க சங்கநாயக்கர் வல்லே பொல பியனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

உடலில் புத்தரின் உருவத்தை பச்சை குத்திய வெளிநாட்டு பிரஜைகளை நாடு கடத்துவதனை விடவும், அவர்களுக்கு பௌத்தம் பற்றிய தெளிவினை ஏற்படுத்துவது அவசியமானது.

புத்தரின் உருவம் மட்டுமன்றி வேறு மதச் சின்னங்கள், உருவங்களும் துஷ்பிரயோகம் செய்யப்படுதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாளுக்கு நாள் வெளிநாட்டுப் பிரஜைகள் பௌத்த மதத்தின் மீது நாட்டம் கொண்டுள்ளனர்.

உடலில் பச்சை குத்திக் கொள்வது அந்த மதத்தின் மீது அவர்கள் காட்டும் அன்பையே பிரதிபலிக்கின்றது.

இவ்வாறு உடலில் புத்தரின் உருவத்தை பச்சை குத்தி வரும் நபர்களு க்கு பௌத்தத்தின் உன்னதம் பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டுமே தவிர அவர்களை நாடு கடத்துவது பொருத்தமற்றது.

தாய்லாந்தில் அதிக எண்ணிக்கையிலான பௌத்த பிக்குகள் உடலில் புத்தரின் உருவச் சின்னத்தை பச்சை குத்திக் கொண்டுள்ளனர்.

இது மதம் மீதான பக்தியே தவிர அகௌரவப்படுத்தும் நோக்கில அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# தேர்தல் குறித்து மூன்று கட்சிகள் இரகசிய சந்திப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்றக் குழு ஒன்று, தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி ஆகியவற்றை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பு அண்மையில் இரகசியமாக இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரிய உள் ளிட்ட பாராளுமன்ற குழு ஒன்றே இந்தச் சந்திப்பை மேற்கொண்டிருக்கிறது.

இதன் போது அடுத்த வருடம் நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பிலான கூட்டணி குறித்து கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# பொதுபல சேனாவின் பெயரை பயன்படுத்தினால் நடவடிக்கை

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி மோசடிகள் இடமபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுபலசேனா இயக்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதி உதவிகளை திரட்டுவதில்லை.

தமது இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி பணம் திரட்டப்பட்டு வருவதாக பொதுபலசேனா குற்றம் சுமத்தியுள்ளது.

பொதுபல சேனா இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி எவரேனும் நிதி திரட்டினால் அவர்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்துள்ளது.

சில மோசடிகாரர்கள் பொதுபல சேனா இயக்கத்தின் முக்கிய பிக்குகளுடன் புகைப்படங்களுக்கு தோற்றி அதனைக் காட்டி பணம் திரட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடுகளுக்கு காதடையாளமிடல் சட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது

## கால்நடை உ. சுகாதார திணைக்களம் அறிவுறுத்து

(கரணவாய்)

மாடுகளுக்கான காதடையாள மிடல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என யாழ்.கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் அறிவித்துள் ளது.

இதற்கமைய பதினெட்டு மாத அல் லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல மாடுகளும் விசேட அடையா ளங்களுடன் குறியிடுவது சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம்மாடுகளின்உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ளல், மாடுகள் திருடப்படுவதை தடை செய்தல், கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார நட வடிக்கைகளின் போது மாடுகளை அடையாளம் காணுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளு வதற்கு இலகுவாக அமையும்.

இதேவேளை காதடையாளமிடப் படாத மாடுகளை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வதும் இறைச்சிக்காக வெட்டப் படு வதும் சட்டப்படி குற்றமாகும்.

இவ்வாறான சட்டத் திலிருந்து மீறும் பட்சத்தில் கைது செய்யும் உரிமை ஒவ்வொரு பொலிஸ் பிரி விற்கும் உண்டு.

இதுவரை தங்கள் மாடுகளுக்கு காதடையாளமிடாத கால்நடை வளர்ப் போர் உடனடியாக தத்தமது அரச கால்நடை வைத்தியருடன் தொடர்பு கொண்டு இதனை நிறைவேற்று மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு கால் நடை உரிமையாளரும்தம்மிடமுள்ளமாடு களின் விபரத்தை ஒவ்வொரு வருடத் தின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய பிரதேசத்திற்கு பொறுப்பான அரச மிருக வைத்திய ருக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதே வேளை உரிய இலக்கங்கள் பொறிக் கப்பட்டதும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால்வழங் கப்பட்ட காதடையாளங்களைமாத்திரமே கால் நடை வளர்ப்போர் பயன் படுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை களை செய்யத் தவறுவது தண்டனைக் குரிய குற்றமாக கருதப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள் ளார். (2-60)

# வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது

(மஸ்கெலிய)

மஸ்கேலியாப் பகுதியில் வல்லப்பட்டையுடன் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கைதான நபரிடமிருந்து 13 கிலோ வல்லப்பட்டைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே குறித்த பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்ட போது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரை ஹட்டன் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லத்துரை கந்தசாமி

கல்வியங்காட்டைப் பிறப்பிட மாகவும் பளை முல்லையடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல் லத்துரை கந்தசாமி நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை பளையிலுள்ள அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் மலையான்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கந்தையா மாணிக்கலிங்கம்

மண்டைதீவைப் பிறப்பிடமாக வும் கந்தரோடையை வசிப் பிட மாகவும் கொண்ட கந்தையா மாணிக்கலிங்கம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை தங்கம்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### செபமாலை சிறில்

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட செபமாலை சிறில் கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.



### தெய்வேந்திரன் வசிகரன்

உரும்பிராய் மேற்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டதெய்வேந்திரன்வசிகரன் கடந்த 23 ஆம் திகதி புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற் றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் முற்பகல் 10 மணிக்கு உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கந்தையா சிவசங்கரப்பிள்ளை

யாழ். கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசங்கரப்பிள்ளை கடந்த 22 ஆம் திக்தி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை St.John's Dixie Chapel & Crematorium, 737 Dundas Street East, Mississauga (ONT) L4Y 2B5 என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

# யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பொலிஸாருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள்

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸாரிற்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் உள்ள தாகவும் அதில் பொலிஸ் அதிகாரிகள் கவனம் செலுத்துவதில்லையெனவும் வடமாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் பொது மக்கள் முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளதாகபொலிஸ் ஆணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங் களில் பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்யச் செல்லும் போது பொலிஸார் பாராமுகங் காட்டுவதுடன் ஒருதலைப்பட்சமான விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

வடமாகாண தேசிய பொலிஸ் ஆணைக் குழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதான விசா ரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப் பிக்கு மாறு யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ பி.விமலசேனாவை கேட் டுள்ளது.

அண்மையில் சுழிபுரம் பெரியபுலோ பகுதியில் கணவனும் மனைவியும் அயல் வீட்டுக்காரர் களினால் தாக்கப்பட்டுள்ளனர். தாக்கப்பட்டதில் கணவன் தலையில் படுகாயம் அடைந்த நிலை யிலும் மனைவி கை முறிந்த நிலையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்துள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்த கணவன், மனைவி வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடந்த 15 ஆம் திகதி அயலவர்கள் தம்முடன் சண்டை போட்டு தம்மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இவர்களின் முறைப்பாட்டினை பதிவுசெய்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் இரு தரப்பினரை யும் விசாரணைக்கு அழைத்துள்ளனர். விசா ரணைக்கு அழைக்கப்பட்டவர்களில் தாக்குதல் மேற்கொண்டவர்கள் பொலிஸாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்ற காரணத்தினால், பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டவர்களுக்கு சார்பாக பேசியதுடன் தாக்குதலுக்கு இலக்காகிய கணவன், மனைவியினை அச்சுறுத்தியுள்ளனர்.

இதன் பின்னர் தாக்குதல் மேற்கொண்ட 5 பேரும் குறித்த கணவன், மனைவியினை கேலி செய்து வந்துள்ளதுடன் அவர்களுக் குச் சொந்தமான காணியில் இருந்த நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரத்தினை உடைத்துள்ளனர்.

மோட்டார் இயந்திரம் உடைக்கப்பட்டதை தொடர்ந்து மீண்டும் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்துள்ளனர். இவ்வாறு 3 முறை முறைப்பாடுகள் பதிவு செய்த நிலை யில் பொலிஸார் குறித்த தாக்குதல் மேற் கொண்டவர்கள் மீது எவ்வித சட்ட நடவடிக் கையும் மேற்கொள்ளவில்லை.


இதனால் தாக்குதலுக்கு இலக்காகிய வர்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர் என தேசிய ஆணைக் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த முறைபாட்டின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு அதிகாரி யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு சம்பவம் தொடர்பாகஅறிவித்துள்ளார். இவ்வாறு பொலிஸ் அதிகாரிகள் பொது மக்களை நியாயத்துடன் நடத்தாவிட்டால் பொலிஸாருக்கும் மக்களுக் கும் நெருக்கம் குறைந்து விடும் என்பதுடன் ஒரு பக்கம் சார்பாக விசாரணை செய்வது தவறாகும்.

அனைவரும் சமம் என்ற வகையில் பொலிஸார் நடவடிக்கை, எடுக்க வேண்டு மென்றும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட் டால், பொலிஸாரின் தவறுகளை பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி நட வடிக்கை மேற்கொள்வதற்கு ஆவண செய்ய வுள்ளதாகவும் ஆணைக் குழுவினர் கூறினர்.

இவ்வாறு சுன்னாகம் பொலிஸ் நிலை யத்திலும் பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் பொலிஸாருக்கு எதி ராக பொலிஸ் உயர் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள் வதில்லையென தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினர் மேலும் தெரிவித்தனர். (2-4)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



### அமரர் சண்முக வடிவேல் வேல்நாதன் (ஐயா)

(ஓய்வு பெற்ற இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

கடந்த 15-03-2014 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 26-04-2014

இன்று சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில்

சபீண்டிகரணமும் 28.04.2014 அன்று திங்கட்கிழமை

அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும்) நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து

அன்னாரின் வீட்டுக் கிருத்திய பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து

நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்

வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சில்லாலை மேற்கு, சாந்தை,
பண்டத்தரிப்பு

குடும்பத்தினர்.

(6203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்று நாட்கள் அரசு முறை பயணமாக ஜப்பான் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா. ஜப்பான் பிரதமரை சந்தித்தார். அதன் பின்னர் விருந்தினர் மாளிகையில் நடந்த இரவு உணவு விருந்தில் பங்கேற்றபோது...

# பாகிஸ்தான் விமான தாக்குதல்; 10 தீவிரவாதிகள் உயிரிழப்பு

(பெஷாவர்)

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பழங்குடியினர் பகுதியில். பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய ஜெட் விமானத் தாக்குதலில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து, பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கூறுகையில், இஸ்லாமாபாத் புறநகரில் உள்ள காய்கறிச் சந்தை மற்றும் பெஷாவர் நகரில் பொலிஸ் நிலையத்தின் மீது அண்மையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களை பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள கைபர் பகுதியில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் நடத்தியிருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, பாகிஸ்தான் இராணுவத்தினரால் அப்பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஜெட் விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மேலும், சார்சத்தா பழங்குடி கிளர்ச்சியாளர்கள் அதிக அளவில் வசிக்கும் ஸ்பெராதாம், மெரோகெல் மற்றும் திர்ரா பள்ளத்தாக்கு பகுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தெரிவித்தனர்.

# சர்வதேச சட்டத்தை மீறிவரும் சிரியா மீது ஐ.நா. நடவடிக்கை



சர்வதேச சட்டத்தை சிரியா மீறிவருவதால் அந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 15 நாடுகளை கொண்ட பாதுகாப்பு கவுன்சிலை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் பாதுகாப்பு கவுன்சிலுக்கு அறிக்கை அளித்துள்ளார். சிரியாவில் கடந்த 3 ஆண்டுகளாக கிளர்ச்சி நடந்து வருகிறது இதில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இந்நிலையில் மனித நேய அடிப்படையில் அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வழி விட வேண்டும் என ஐ.நா நிறைவேற்றிய தீர்மானத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளாததால் சிரியா மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாக பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

# அணு ஆயுத சட்டத்தை மீறிய அமெ. உட்பட 10 நாடுகள் மீது வழக்கு

(வோஷிங்டன்)


அணு ஆயுதம் குறித்த சர்வதேச சட்டத்தை மதிக்கவில்லை என அமெரிக்கா மீது மார்ஷல் தீவுகள் நிர்வாகம் வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த வழக்கு அமெரிக்காவின் சான்பிரான் சிஸ்கோ நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் மார்ஷல் தீவுகள் என்ற சிறிய நாடு உள்ளது.

இது பசுபிக் கடல் பிராந்தியத்தில் உள்ளது. இங்கு கடந்த 1946 மற்றும் 1958 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா அணு குண்டு வெடித்து சோதனைகள் நடத்தியுள்ளது.

67 தடவைகள் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. அதனால் அங்கு சுற்றுப்புற சூழலும், மக்களின் உடல் நலமும் பாதிக்கப்பட்டுள்ளது. கதிர்வீச்சு பாதிப்பு இன்னும் இருந்து வருகிறது.

அதே நேரத்தில் அணு ஆயுதங்களை



வைத்திருக்கும் அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, இஸ்ரேல் மற்றும் வடகொரியா உள்ளிட்ட 9 நாடுகள் மீது நெதர்லாந்து தலைநகர் ஹகூவில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில் கடந்த 1968 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சர்வதேச அணு ஆயுத சட்டத்துக்கு புறம்பாக செயற்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# ஹமாஸ்-பாலஸ்தீன் பேச்சுவார்த்தை இரத்து

## இஸ்ரேல் பிரதமர் தெரிவிப்பு

(ஜெருசலேம்)

பாலஸ்தீனிய மக்கள் நீண்டகாலம் எதிர்பார்த்திருந்த ஹமாஸ் போராளிகள் இயக்கம்-அரசு அமைதி ஒப்பந்தம் கடந்த புதன்கிழமை அன்று வெற்றிகரமாக நிறைவேறியது.

ஆனால் ஹமாஸ் போராளிகள் தொடர்ந்து இஸ்ரேலை எதிர்த்து வந்ததினால் அவர்களுடனான சமாதானம் இஸ்ரேல்-பாலஸ்தீன அமைதிப் பேச்சுவார்த்தையைத் தடை செய்யும் என்று இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகூ குறிப்பிட்டிருந்தார்.

அதன்படியே நேற்றுமுன்தினம் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகள் துண்டிக்கப்பட்டதாகக் கூறியுள்ள இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது புதிய பொருளாதாரத் தடைகளையும் விதிக்க இருப்பதாக எச்சரித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் புதிய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டிய இஸ்ரேலின் பாதுகாப்பு மந்திரி சபை இந்த தீர்மானத்தை தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனிய அரசியலில் ஹமாஸ் இயக்கத்தினரின் பங்களிப்பை இஸ்ரேல் எதிர்க்கின்றது.

ஹமாஸ் மீது சாய்ந்துள்ள பாலஸ்தீனத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தையைத்



தொடர முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பாலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அப்பாசின் புனை பெயரில் அபு மேசன் இஸ்ரேலை அழிக்க நினைக்கும் கொலைகார பயங்கரவாத அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

அமைதிக்கு பதிலாகத் தீவிரவாதத்தை அவர் தேர்ந்தெடுத்துள்ளார் என்றும் நேதன்யாகூ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பாலஸ்தீனிய ஜனாதிபதி சமீபத்தில் 15 சர்வதேச மரபுகளுடன் இணையும் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கும் இஸ்ரேல் தங்களது பதில் நடவடிக்கையை வெளியிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பதவி உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்; வீரர்களை பணி நீக்கம் செய்த பொலிவியா அரசு

(சுக்ரே)

பொலிவியா நாட்டின் 500இக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று பதவி உயர்வு விருப்பம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

அதுமட்டுமின்றி கடந்த திங்கட்கிழமையன்று பணி நீக்கம் செய்யப்பட்ட நான்கு ஆர்ப்பாட்டத்தரப்பு தலைவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், தங்களுக்கும் அதிகாரிகளுக்கு இணையான மருத்துவக் காப்பீடுகள் வழங்கப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

பழங்குடி இன வீரர்களை அரசு புறக்கணிப்பதாகக் கூறும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி ஈவோ மொரேல்சை சந்திக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தனர்.

நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கில் அதிகரித்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களை மறைக்கும் விதமாக சீருடை அணிந்து தலைநகர் லா பாஸ் வீதிகளில் ஊர்வலம் வந்தனர்.

இவர்களுடன் வீரர்களின் மனைவியரும், இந்த போராட்டத்தை ஆதரிக்கும் அய்மாரா பழங்குடியினத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

எங்கள் தலைவர்களைப் பதவி நீக்கம் செய்து அவர்கள் விரும்புவதைக் கோர முடியாது.

கைது செய்யப்பட்ட தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை என்றால் போராட்டம் அதிகரிக்கும் என்று சாமுவேல் கொவா லைரட் என்ற பழங்குடித் தலைவர் குறிப்பிட்டார்.

போராட்டம் தொடங்கிய பின்னர் புதன் கிழமையன்று அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆயுதப் படைகளின் நிலைமை மேம்படுத்தப்படுகின்றது என்றும், வரும் 2015 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட ஆண்களும், இராணுவ வீரர்களும் அதிகாரிகளுக்கு இணையான கல்வி உதவித் தொகை பெறமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும் நேற்றுமுன்தினம் போராட்டம் தொடர்ந்ததை முன்னிட்டு பட்டியலிடப்பட்ட ஆண்களில் 702 பேர் தேசத்துரோக நீக்கம் செய்யப்படுவதாக அந்நாட்டின் இராணுவத் தலைவர்கள் உத்தரவிட்டனர். பொலிவியாவின் முப்படைகளும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தேசத் துரோகம், குற்றங்கள், கிளர்ச்சி, அரசியல் நடவடிக்கைகள் போன்றவற்றில் இந்த வீரர்கள் ஈடுபட்டது மட்டுமின்றி ஆயுதப் படைகளுக்கு மரியாதைக் குறைவு ஏற்படும் விதத்தில் நடந்து கொண்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதார தடை

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது ஆசிய பயணத்தின் முதல்கட்டமாக ஜப்பான் சென்றுள்ளார். அப்போது அவர் அந்நாட்டுப் பிரதமர் ஷின்சோ அபேவுடன் இணைந்து செய்தியாளர்களை சந்திந்தபோது கூறியதாவது.

ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைக்கு தேவையான ஆதரவு கிடைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறேன். கிழக்கு உக்ரைனில் பதற்றத்தை தணிப்பதற்காக, கடந்த வாரம் ஜெனீவாவில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை ரஷ்யா பின்பற்றவில்லை.

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மூலம் அப்பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துவரும் நடவடிக்கைகளில் இருந்தும் அந்நாடு பின் வாங்கவில்லை. சர்ச்சைக்குரிய அந்த தீவுக் கூட்டங்கள், வரலாற்று ரீதியாக ஜப்பான் ஆளுகையின் கீழ் இருந்துள்ளன.

இப்பிரச்சினை தொடர்பாக ஜப்பானுக்கு எதிராக இராணுவ அச்சுறுத்தல் எழும்



பட்சத்தில், அந்நாட்டுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி ஜப்பானுக்கு ஆதரவாகவே அமெரிக்கா செயற்படும்.

இந்த விவகாரத்தில் ஒருதலைபட்சமாக முடிவெடுப்பதை அனுமதிக்க முடியாது. எனவே, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் அமைதியான முறையில் இதற்கு தீர்வு காண முயல வேண்டும் என்று ஒபாமா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும். - மெரி கிளாட்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மதவாதத்திற்கு எதிரான தர்மயுத்தம் ஆரம்பம்!

## பொது பல சேனா கர்ஜிப்பு

(கொழும்பு)

மதவாதத்திற்கு எதிரான தர்ம யுத்தத்தினை நாம் ஆரம்பித்துள்ளோம். நாட்டில் புதிய மாற்றமொன்றினைக் கொண்டு வந்து பௌத்த தர்மத்தை காப்பாற்றுவோமெனவும் யாரிடமும் மன்னிப்பு கேட்கப் போவதில்லை எனவும் பொது பல சேனா பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

வட்டரக விஜித தேரர் ஒழிந்திருப்பது தெரியவே நாம் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சுக்குள் நுழைந்தோம். குழப்பத்தை ஏற்படுத்துவது எமது நோக்கமல்ல எனவும் அவ் அமைப்பு நியாயப்படுத்தியது.

பொது பல சேனா பௌத்த அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இக்கருத்து முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக பொது பல சேனா பௌத்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிக்கையில்,

அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அமைச்சில் அமைதியான முறையிலேயே பௌத்த தேரர்கள் செயற்பட்டனர் எனவும் இறுதியில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் ஊடகங்களுக்கு பெரிய விடயமாக தென்பட்டு விட்டது.

எனினும் எமது செயற்பாடுகள் குறித்தோ நடவடிக்கை தொடர்பிலோ எவரிடமும் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் எமக்கில்லை. அரசாங்கம் தனது கடமையினை சரிவரச் செய்தால் பௌத்த தேரர்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது

தற்போது நாம் தர்ம யுத்தத்தினை ஆரம்பித்துள்ளோம். ஆயுதம் ஏந்தாது சண்டைகளில் ஈடுபடாது மதத்தை காப்பாற்றுவதற்காக போராடி வருகின்றோம்.

முஸ்லிம் மத மாற்று நடவடிக்கைகளில் இருந்தும் இட அபகரிப்பில் இருந்தும் எம்மை பாதுகாக்க வேண்டுமாயின் ஒவ்வொரு பௌத்தரும் பொலிஸாக மாற வேண்டும். தமது இடங்களையும் தர்மத்தினையும் காப்பாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எம் மீது வழக்கு தொடுத்தாலும் நஷ்ட ஈடு கேட்டாலும் ஒரு ரூபாய் கூட நாம் வழங்கமாட்டோம். அமைச்சருக்கு நாமும் எமது பலத்தைக் காட்டுகின்றோம். நாம் ஒரு போதும் பொய் கூறி பாவச் செயல்களை செய்ய விரும்பவில்லை.

பாவச் செயல் செய்வதை தடுக்கும் பொறுப்பு எமக்கு உண்டு. அதனையே நாம் செய்து வருகின்றோம். இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என்றாலும் இங்கு அனைத்து மதங்களுக்கும் உரிமை உண்டு.

அதேபோல் யாரும் யாரையும் கட்டாயப்படுத்தி மத மாற்றம் செய்யவும் முடியாது. தற்போது மத விடயங்களை கவனிக்கும் பொலிஸ் சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல் இனி எவரும் சட்டவிரோத மத மாற்றத்தை நாட்டில் ஏற்படுத்தினால் அதற்கு எதிராக நிச்சயம் செயற்படுவோம் எனவும் அவர தெரிவித்தார். (2)

## மோடியாலும் லேடியாலும் முடியாதப்பா உன் டாடியின் நடிப்பை வெல்ல!

இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடந்து கொண்டு இருக்கின்ற இந்த வேளையில் தேர்தல் பிரசாரம் தடல் புடலாக நடந்து முடிந்துள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு பேராதரவு உண்டு என்ற செய்திகளின் மத்தியில், காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை எதிர்க்கட்சி ஆசனம் என்பதும் தெளிவாகிற்று.

கூடவே தமிழகத்தின் முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமராகும் வாய்ப்பு உண்டு என்ற கருத்தும் அரசியல் நோக்கர்களிடம் இருக்கவே செய்கின்றது.

மோடி பிரதமரானால் என்ன? லேடி பிரதமரானால் என்ன? இரண்டிலும் ஈழத்தமிழர்கள் மகிழ்வடைவர் என்பதும் உறுதி.

அதேநேரம் கலைஞர் கருணாநிதியின் திமுகவிற்கு எந்த ஆசனமும் கிடைக்கக் கூடாது என்பதும் மத்தியில் ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பம் காங்கிரஸ் கட்சிக்கு இம்மியும் இருக்கலாகாது என்பதும் ஈழத்தமிழர்களின் பிரார்த்தனை.

நிலைமை இதுவாக இருக்கையில் மோடியும் அல்ல லேடியும் அல்ல என் டாடிதான் சிறந்த நிர்வாகி என்றவாறு கலைஞர் கருணாநிதியின் மகன் மு.க. ஸ்ராலின் தேர்தல் பிரசாரம் ஒன்றில் கூறியிருந்தார்.

ஸ்ராலின் கூறியது உண்மையாயினும் நிர்வாகத்தில் சிறந்தவர் என்பது பொருத்தமல்ல. உண்மையில் மோடியை விட, லேடியை விட மு.க. ஸ்ராலினின் டாடி நடிப்பிலேயே மிகச் சிறந்தவர்.

அவருக்கு நிகர் அவர் என்று கூறும் அளவில் கலைஞர் கருணாநிதி போல நடிப்பதற்கு யாராலும் முடியாது. அதிலும் ஈழத்தமிழர்களின் விடயத்தில் அவரின் நடிப்பு உலக சாதனைக்குரியது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள் குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடந்து கொண்டு எங்களைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!! என்று கதறியபோது,

உண்ணாவிரதம் இருப்பது போல நடித்த கலைஞரின் நடிப்பு இருக்கிறதே! இதை மோடியாலும் நடிக்க முடியாது அந்த லேடியாலும் நடிக்க முடியாது.

ஏன்? அந்த நடிப்புக்கு ஒருவரும் இன்னும் பிறக்கவில்லை என்றே கூறலாம். இதைத்தான் அண்ணன் மு.க.ஸ்ராலின் சொல்லியிருக்க வேண்டும்.

எனினும் அவர் தன் தந்தை சிறந்த நிர்வாகி என்பதாக வார்த்தையில் வடித்து விட்டார்.

வார்த்தை தவறி விட்டால் கண்ணம்மா மார்பு துடிக்குதடி என்ற பாரதியின் பாடல் மட்டுமே இப்போதைக்கு நமக்கு ஆறுதலாக அமைகிறது.

மற்றும்படி கலைஞர் கருணாநிதிக்கு எங்கள் மீது-எங்கள் மண்ணின் மீது எந்த இரக்கமும் பரிவும் இல்லை.

எங்களைக் காப்பாற்ற வேண்டிய நேரத்தில் தமிழகத்தின் முதல்வராக இருந்த கலைஞர் எங்களின் மிக உச்சமான அவலத்தின் போது நடித்ததை நாங்கள் மறப்பது முறையல்ல.

ஆம், எங்கள் மண்ணில் எங்களை வதைத்தவர்களையும் எங்களை வதைக்க உதவியவர்களையும் நாம் வதைபடும் போது நாடகம் நடித்தவர்களையும் ஈழத்தமிழர்களின் இருப்பு இந்த மண்ணில் உள்ளவரை மறப்புக்கிடமில்லை. அவ்வாறு மறந்தால் எங்களுக்கு விடிவும் இல்லை.

நன்றி கொன்றவர்க்கு உய்வில்லை என்பது வள்ளுவனின் முடிவு.

ஆனால், நன்றி செய்வது போல பாசாங்கு செய்தவனை மறந்தாலும் உய்வில்லை என்பது தான் எங்கள் முடிவு. அன்புக்குரிய அண்ணன் ஸ்ராலின் அவர்களே! தேர்தல் பிரசாரத்தின் போது ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற காங்கிரஸ் கட்சி தவறி விட்டது என்று உங்கள் டாடி கூறியிருந்தார்.

சரி, இதை ஆட்சியில் இருந்த போது ஏன் அவர் சொல்லவில்லை.

இதுதான் உங்கள் டாடியின் சிறப்பு என்பதை நீங்கள் உணரும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது மட்டும் உறுதி-உண்மை.

## க.பொ.த(சா/த) தோற்றுபவர்கள் அ.அட்டைக்கு விண்ணப்பிக்குக

### ஆட்பதிவுத் திணைக்களம் அறிவுறுத்து

(கொழும்பு)

2014 க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் முன்கூட்டியே தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

பாடசாலை அதிபர்களுக்கு இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் தேசிய அடையாள அட்டை அச்சிடப்படவிருப்பதால் முன்கூட்டியே விண்ணப்பித்தல் சிறந்தது என ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் ஒக்டோபர் 31ஆம் திகதியாகும் போது 16 வயதை பூர்த்தி செய்யும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, க.பொ.த உயர் தர பரீட்சை விடைத்தாள் மீள் திருத்தத்தின் பின் இன்று முடிவுகள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள் மீள் திருத்தத்திற்கு 50ஆயிரம் வரையான மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். (2)

## திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட புலனாய்வுப் பிரிவினரின் தேடுதல் நடவடிக்கையில் பல்வேறு திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 6 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பகுதியில் 3 பேரும் கொடிகாமத்தில் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டதுடன் அவர்களை அந்தந்த இடங்களின் பொலிஸார் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-4)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



அருளை நாட நாம் பல வழிமுறைகளை முயற்சி செய்தோம். நாம் தியானம் செய்ய முயல்கிறோம். ஆனால் நம் மனதின் எண்ண ஓட்டங்களைத் தடுக்க முடியாமல் சோர்ந்து போகிறோம். பக்தி மார்க்கத்தில் செல்ல முயற்சி செய்து அதில் நமக்கு பாவமும் தேவையான நம்பிக்கையும் இல்லாததை உணர்கிறோம். ஏதாவது செய்து கடவுளை அடைய விரும்புகின்றோம்.

அது என்ன வழி? கடவுளின் நாமம் சொல்வதே அவரை அடைய சுலபமான வழி என்பதும் நம் முன்னோர் வாக்கு.

உங்களால் தியானம் செய்யவோ அல்லது பஜனைகள் செய்யவோ முடியவில்லை என்றாலும் நீங்கள் இந்த மந்திர உச்சாடனம் செய்யலாம்.

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீபகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

இது குறிப்பிட்ட கடவுளுக்கு சொந்தமானது அல்ல. இது அந்தக் கடவுளின் குணாதிசயங்களை விபரிக்கிறது.

கடவுளிடம் தொலைபேசியில் பேசுவதற்கு இணையானது இந்த மந்திரம் சொல்வது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஐந்து விடயம் கூட போதும்



- மனிதனுக்குள் புதைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வியின் குறிக்கோள்.
- மன உறுதியும், அதை வெளிப்படுத்தும் விதமும், பயன்தரும் விதத்தில் மனஆற்றலை அமைப்பதும் பயிற்சிகள் கல்வியில் இடம்பெற வேண்டும்.
- வெறும் புள்ளிவிபரங்களைச் சேமிப்பதில் பயனில்லை. மனதை ஒருமுகப்படுத்துவதாக கல்வித் திட்டம் அமையவேண்டும்.
- மூளைக்குள் பல்வேறு விடயங்களைத் திணித்து வைப்பதால் யாருக்கும் பயனில்லை. அவை ஜீரணமாகாமல் வாழ்நாளெல்லாம் தொந்தரவையே கொடுக்கும்.
- தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தன் சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்வதில் தான் கல்வியின் உண்மையான வெற்றி இருக்கிறது.
- ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்துக் கொண்டு அவற்றை வாழ்வில் சரிவரக் கடைப்பிடித்தால் கூட, கல்வி கற்ற பயன் ஒருவருக்கு கிடைத்துவிடும்.
- சிங்கம் போன்ற மன உறுதி, நல்ல ஒழுக்கம், பிறருக்கு உதவி புரியும் குணம் ஆகியவையே கல்வி பெற்றதன் அடையாளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 26 ஆவது தேசிய விளையாட்டு விழாவினை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளானது ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 22 ஆம் திகதி பி.ப 2.30 க்கு கருநாட்டுக்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் சேவை அதிகாரி ஜெ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திரேஸ்குமார் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வின் படங்களை காணலாம்.

# வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பி.இ.க வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 26ஆவது வருடாந்த இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் இன்று சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மதியம் 2.45 மணிக்கு இடம் பெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனும், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றொகான் மகேசும் கலந்து கொள்வார்கள்.


கௌரவ விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந்திரனும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரனும், தொழிலதிபர் ஆர்.ஜெகதீஷ்வரனும் கலந்து கொள்வார்கள்.

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்பட்ட உதை பந்தாட்ட இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் சாவற்காடு இளைஞர் கழகமும் நவாலி வடக்கு சென் பீற்றர்ஸ் இளைஞர் கழகமும் மோதவுள்ளது.

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவர்கள் வழங்கும் சிறப்பு ஜிம்னாஸ்ரிக் உடற்பயிற்சிக் கண்காட்சியும் இடம் பெறவுள்ளது.

ஏனைய தடகள நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர். (க-23)



தீவக வலயமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டியில் அனலை தீவு சதாசிவ மகா வித்தியாலய 15 வயதுப்பிரிவு மாணவர்கள் முதலாமிடத்தினைப் பெற்றுக்கொண்டனர். வெற்றிபெற்ற மாணவர்களுடன் உடற்கல்வி ஆசிரியர் எஸ்.அஸ்வினி, பாடசாலை அதிபர் ல.இராதா கிருஷ்ணன் பயிற்றுவிப்பாளர் இ.அனோராஜ் ஆகியோர் படத்தில் நிற்பதனை காணலாம்.

# கார்மேல் போய்ஸ் வெற்றி

கோப்பாய் நொதேர்ன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான 7 பேர் 6 பந்து பரிமாற்றத்தினை கொண்ட மாபெரும் மென்பந்து சுற்று போட்டியின் அரையிறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் நொதேர்ன் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியினை எதிர்த்து முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம் மோதியது.

அரையிறுதியாட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது அதிரடியாக ஆடி 6 பந்து பரிமாற்றத்தின் நிறைவில் 83 ஓட்டங்களை பெற்றது.

இதில் அயன் ஏழு 6 ஓட்டங்கள் அடங்கலாக 52 ஓட்டங்களை பெற்றார், அணித் தலைவர் செல்டன் இரண்டு 6 அடங்கலாக 18 ஓட்டங்களையும் பெற்றார்.

84 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நோக்கத்துடன் களமிறங்கிய முத்துத்தம்பி விளையாட்டுக்கழகம் 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன் மூலம் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியானது இறுதிபோட்டிக்கு முன்னேறியது.

இறுதியாட்டம் எதிர்வரும் மே மாதம் 18 திகதி கோப்பாய் நொதேர்ன் மைதானத்தில் நடைபெறும். (க-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

## இன்றைய போட்டி

வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

முதற்கட்டப் போட்டிகளைத் தொடர்ந்து இறுதிக் கட்ட போட்டிகள் மின்னொளியில் இடம்பெறவுள்ளன.

பதிவு செய்த அனைத்துக் கழகங்களையும் தவறாது சமுகம் தருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க-23)

# வல்வை நெடியகாடு இ.க இல்ல தடகள வி.விழா

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 2014 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த இல்ல தடகள விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கழக மைதானத்தில், கழகத் தலைவர் திரு.K.N.தேவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சோதிமயம் (மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுனர்), ந.அனந்தராஜ் (நகரபிதா, வல்வெட்டித்துறை நகரசபை), .மா.நவநீதமணி (தலைவர், பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


நிகழ்வுகள் வரிசையில் கழக வீரவீராங்கனைகளுக்கான தடகள விளையாட்டுக்கள் மற்றும் இடைவேளை நிகழ்வுகளுடன், வெளிக் கழகங்களுக்கான நிகழ்வுகளாக கிட்டி இழுத்தல் (பலம் பார்த்தல்), 4 X 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம், தலையணைச் சண்டை மற்றும் கிறீஸ் கம்பம் ஏறுதல் நிகழ்வுகளும் நடைபெறும் என கழக நிர்வாகத்தினரால் அறியத்தரப்பட்டுள்ளது. (க-23)

# 41 வயதை கடந்தார் சச்சின்



நேற்றுமுன்தினம் 41 ஆவது பிறந்த நாள் கொண்டாடிய சச்சினுக்கு, கிரிக்கெட் பிரபலங்கள் உட்பட பலர், பாராட்டு தெரிவித்தனர். இந்தியாவின் 'மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின் கடந்த ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்காக 6 தொடர்களில் பங்கேற்றவர். ஓய்வு பெற்று விட்டதால், மும்பை அணியின் 'நட்சத்திரம்' என்று அறிவிக்கப்பட்டார்.

ஏழாவது தொடருக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றிருந்த இவர், மும்பை திரும்பினார். நேற்றுமுன்தினம் இவருக்கு 41 ஆவது பிறந்த நாள். ஓய்வுக்கு பின் கொண்டாடும் முதல் பிறந்தநாள் என்பதால் 'ஸ்பெஷலாக' இருந்தது. பல்வேறு வீரர்கள், பிரபலங்கள் 'டுவிட்டர்' இணையதளத்தில் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். (க)


வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான நடைபெற்ற சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழும் கேடயங்களும் வழங்கும் நிகழ்வு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் கேடயங்களையும் வழங்குவதனையும் வெற்றியீட்டிய ஒரு தொகுதி மாணவர்கள் அமர்ந்திருப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியை வென்றது ஹைதராபாத்




டெல்லி அணிக்கெதிரான போட்டியில் ஹைதராபாத் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவெடுத்தது. அந்த அணியின் தொடக்க வீரர்களாக தவானும், பிஞ்ச்சும் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர். டெல்லி அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான நதீம் வீசிய ஆட்டத்தின் 7-வது ஓவரில் 22 பந்துகளில் 33 ஓட்டங்களை குவித்த தவான் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 3-வது ஆட்டக்காரராக டேவிட் வோர்னர் களமிறங்கினார்.

பிஞ்ச்சும், வோர்னரும் டெல்லி அணியின் பந்துவீச்சை அடித்து நொறுக்கி மைதானத்தின் நாலாபுறமும் சிதறடித்தனர். இருவரும் கடைசிவரை விளையாடி ஆட்டமிழக்காமல் இருந்தனர். முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் பிஞ்ச் 53 பந்துகளில் 88 ஓட்டங்களும், வோர்னர் 45 பந்துகளில் 58 ஓட்டங்களும் எடுத்தனர். இதனால் சன் ரைசர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 184 ஓட்டங்களை குவித்தது.

பின்னர் களமிறங்கிய டெல்லி அணியின் தொடக்க வீரர்களான டி ஹொக்கும், முரளி விஜயும் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தனர். இருவரும் முதல் விக்கெட்டுக்கு 99 ஓட்டங்கள் சேர்த்தனர். ஆட்டத்தின் 12-வது ஓவரில் 30 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவித்த டி ஹொக் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் முரளி விஜயும் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த பீட்டர்சனும், கார்த்திக்கும் வெற்றி இலக்கு கடினமான தால் அடித்து ஆட முயன்று தங்கள் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். ஆனாலும் டுமினியும் திவாரியும் இணைந்து கடைசி வரை போராடினர்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இருவரும் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தனர். கடைசி இரண்டு பந்துகளில் 13 ஓட்டங்கள் தேவை என்றிருந்தபோது கடைசி ஓவரின் ஐந்தாவது பந்தில் டுமினி சிக்ஸ் அடித்தார். கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தால் ஆட்டத்தை சமன் செய்யலாம் என்ற விறுவிறுப்பான நிலையில் கடைசி பந்தில் 2 ஓட்டங்களை மட்டுமே டுமினியால் எடுக்க முடிந்தது. இதனால் சன் ரைசர்ஸ் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகன் விருது சன்ரைசர்ஸ் அணியின் பிஞ்சுக்கு வழங்கப்பட்டது. (க)



## நடப்புச் சம்பியன் மும்பையை வீழ்த்தி சென்னை ஹட்ரிக் வெற்றி

சென்னை மற்றும் மும்பை அணிகளுக்கு இடையேயான போட்டியில் சென்னை அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இதன்படி களமிறங்கிய மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்கள் எடுத்தது. மும்பை அணியில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 50 ஓட்டங்கள் எடுத்தார். சென்னை பந்துவீச்சில் அபாரமாக பந்து வீசிய மோகித் சர்மா 4 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். இதனை அடுத்து 142 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி 19 ஓவரில் 3 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சென்னை அணியில் அதிகபட்சமாக பிரெண்டன் மக்கலம் 71 ஓட்டங்கள எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் வெற்றியை உறுதி செய்தார். இதன் மூலம் சென்னை அணிக்கு இது ஹட்ரிக் வெற்றியாகும். இதே போல் மும்பை அணிக்கு ஹட்ரிக் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை அணியின் மோகித் சர்மா தெரிவானார். (க)




## அரசிற்கு எதிரான...

தேசியக் கூட்டமைப்பினால் மாகாண சபையின் ஊடாக தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை.

இந்நிலையில் மாகாணசபையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கடுமையான பிரேரணைகளைக்கொண்டு வரவேண்டாம் என கட்சி தலைமைகளினால் அறிவுறுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது.

இதேவேளை வடக்கு மாகாண சபையில் முக்கிய பிரேரணைகள் கொண்டு வருவதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைமைகள் குழப்பி வருவதாக கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைகள் தொடர்பில் அவைத் தலைவரிடம் பிரேரணைகள் முன்மொழியப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அமர்விலும் சரி எதிர்காலத்திலும் வடக்கு மாகாண சபையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான பிரேரணைகளைக் கொண்டு வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவ்வாறு உறுப்பினர்களினால் பிரேரணைகள் முன்மொழியப்பட்டால் அதனை நிராகரித்து விடுமாறு அவைத்தலைவரிடம் கட்சித்தலைமையினால் கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (கெ)




கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் செயலாளர்
திரு. மா. தியாகராஜா
அவர்களின் அன்புச் சகோதரன்

அமரர் மாணிக்கம் மணிவாசகம் (செட்டி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-7177)

தலைவர், ஆளுநர் சபை உத்தியோகத்தர்கள்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
யாழ்ப்பாணம்.


## வாள்வெட்டில் அல்ல விபத்திலேயே மரணம்

### தெல்லிப்பளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

24.04.2014 அன்று வலம்புரியின் முன்பக்கத்தில் வெளிவந்த, வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு என்ற செய்தி தவறானது என தெல்லிப்பளை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில்,

24.04.2014ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையின் பிரதான பக்கத்தில், வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு எனும் தலைப்பில் வெளியான செய்தியில்; குறித்த குடும்பஸ்தர் வாள் வெட்டில் இறந்ததாகப் பொலிஸார் கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் எனது தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி, குறித்த அந்நபர் வாகன விபத்தில் உயிரிழந்ததாக கண்ணால் கண்ட சாட்சியங்களின் வாக்குமூலம் பதியப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த விபத்தை ஏற்படுத்திய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் தெல்லிப்பளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாந்த மடத்தில் மாதாந்த சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இடம்பெற்றுவரும் மாதாந்த சொற்பொழிவின் தொடர்ச்சி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கனகரத்தினம் சுவாமிகள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 'வேதாந்தம்' எனும் தலைப்பில் பேராசிரியர் நா.ஞானகுமாரன் உரையாற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் அதில் பங்குபற்றி பயன்பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## ரி.ஐ.டியினரால்...

பதற்கான தொடர்ச்சியான நடவடிக்கையின் ஒரு பகுதியே இது என்று குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரை கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இந்த வர்த்தமானியில் பட்டியலிடப்பட்ட நபர்களுடன் அவர்களது உறவினர்கள் கூட இலங்கையில் இருந்து தொடர்பு கொள்வது சட்டவிரோதமானதாக்க் கருதப்படும் என்று இதன்போது பீரிஸ் கூறியதாக இச்சந்திப்பில் கலந்து கொண்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை ஒரு முன்னாள் மூத்த இராஜதந்திரி உள்ளிட்ட பலர் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

ஐ.நா பாதுகாப்பு சபையின் ஒழுங்குவிதி 1373க்கு அமைய 16 புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும், 424 தனிநபர்களையும் இலங்கை அரசாங்கம் தடை செய்துள்ளமை தெரிந்ததே. (செ-11)

## ஐ.நா.பாதுகாப்பு...

இலங்கைக்கு எப்போதும் சீனா நண்பனாக இருக்கும். சீனாவுடன் நெருக்கமான உறவை நீங்கள் ஏற்படுத்தியுள்ளீர்கள்.

உட்கட்டமைப்பு, பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்புகளை வலுபடுத்துவதற்கு நாம் தொடர்ந்து பணியாற்றுவோம்.

எமது ஒத்துழைப்புகள் உயர் மட்டத்தில் விரிவாக்கப்பட வேண்டும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை எமது ஒரு முக்கியமான பங்காளி.

21-வது நூற்றாண்டின் கடல்சார் பட்டுப்பாதை அபிவிருத்திக்கு இலங்கை வழங்கிய உதவிகளுக்கு நன்றி கூற சீனா கடமைப்பட்டுள்ளது.

இது இரண்டு நாடுகளுக்கு இடையிலான ஆழமான கடல் மற்றும் வான் இணைப்பை ஏற்படுத் தும்.

எல்லாக் காலத்திலும் இலங்கையின் நணபனாக சீனா இருக்கும்.

இலங்கை ஒரு நல்ல நண்பன், நல்ல பங்காளி என்று அவர் மேலும் தெரிவித்துளளார்.

இச்சந்திப்பில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கைக்கு சீனா அளித்துவரும் ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார். (செ-11)

(C-7174)
Architectural CAD Centre
Mathavady lane-Kondavil
Contact No:071 8617972
Civil Mech.
Auto CAD
2D-Drawing and 3D-Modeling
University of Peratheniya + University of Moratuwa

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.
அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC Computer Repair
52,Hospital Road,Jaffna. (C-7119)

## கண்ணிவெடி...

ளார்.

முகமாலைப் பகுதியில் வழமை போன்று இந்தப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஹலோறஸ்ற் பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது எதிர்பாராத விதமாக நேற்றுக் காலை 8 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசமானது கடந்த காலத்தில் யுத்தம் நடைபெற்ற மிக முக்கிய பிரதேசமாக காணப்பட்டதால் யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புக்களினால் அதி நவீன சக்தி வாய்ந்த கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

இங்கு மிகவும் சக்தி வாய்ந்த இந்த கண்ணிவெடிகள் அகற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கு அதி நவீன இயந்திரங்கள் பயன்படுத்தி வருவதாகவும் இதனை அகற்றும் கால எல்லையை குறிப்பிட முடியாதென்றும் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக கூட்டத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## தமிழ் பெண்கள் மீது...

போரின்போது பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொடர்பிலான ஏனைய வன்முறைகளை ஆயுதமாக கையாளப்பட்ட 21 நாடுகள் கவலைக்குரிய நாடுகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்த 21 நாடுகளும் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு என உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த நாடுகள் என்று போரில் பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சிறப்புப் பிரதிநிதி சாய்னாப் ஹவா பங்குரா தெரிவித்துள்ளார்.

போராளிக் குழுக்கள், ஆயுதக் குழுக்கள் மற்றும் அரசாங்க படைத் தரப்பினர் என 34 ஆயுதக் குழுக்கள் போரில் பாலியல் வல்லுறவு மற்றும் ஏனைய முறைகளில் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டமை தொடர்பில் இந்த அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில் இலங்கை, அங்கோலா, பொஸ்னியா ஹெர்சகோவினா, கம்போடியா, கினியா, லைபீரியா, லிபியா, நேபாளம், சியராலியோன், சோமாலியா, சூடான், யேமன், மத்திய ஆபிரிக்க குடியரசு, ஐவரி கோஸ்ட், கொங்கோ, மாலி, தென் சூடான், சிரியா, மியான்மர் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 21 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொளளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி வருகின்ற பிரித்தானியா, இலங்கையை கவலைக்குரிய நாடாக அறிவித்திருந்தது.

2013ஆம் ஆண்டுக்கான மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு கடந்த 10ஆம் திகதி வெளியிட்டிருந்த அறிக்கையிலேயே, இலங்கையை இவ்வாறு கவலைக்குரிய நாடாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## எதிர்க்கட்சி தலைவராக...

வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சி உறுப்பினர் கந்தசாமி கமலேந்திரன் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஈ.பி.டி.பியில் இருந்தும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்தும் கமலேந்திரன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இதனால் அவருடைய உறுப்பினர் பதவி வெற்றிடத்திற்கு எஸ்.தவராசா வடமாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு, அலரி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் கடந்த புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிலையிலே எதிர்க்கட்சித் தலைவராகவும் உறுப்பினர் தவராசாவினை ஜனாதிபதி நியமித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் 28 ஆம் திகதி இடம்பெறும் வடக்கு மாகாணசபையின் 8 ஆவது அமர்வில் எதிர்க்கட்சி உறுப்பினர் தவராசா தமது கன்னியுரையினையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## அரசியல் சட்ட அமர்வு...

பற்றி மத்திய அரசு மூன்று நாட்களுக்குள் முடிவு தெரிவிக்க வேண்டும் என்றும் தமிழக அரசு கெடு விதித்தது.

இதனை எதிர்த்து மத்திய அரசு தொடுத்த மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு நேற்று உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வில் வழங்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பில், இந்த வழக்கு முக்கிய அரசியல் சட்டம் தொடர்பான கேள்விகளை எழுப்புவதால், இது குறித்து ஒரு ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு முன் மூன்று மாத காலத்துக்குள் விசாரணைக்காகப் பட்டியலிட வேண்டும் என்றும் அது உத்தரவிட்டது.

தலைமை நீதிபதி பி.சதாசிவம், நீதிபதிகள் ரஞ்சன் கோகோய மற்றும் என்.வி.ரமணா ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வெளியிட்டது.

அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கில் விசாரிக்க ஏழு முக்கிய அரசியல் சட்ட கேள்விகளையும் அது வரையறுத்தது.

மரண தண்டனை ஆயுள் தண்டனையாக, உச்சநீதிமன்றத்தாலோ, அல்லது குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநராலோ குறைக்கப்பட்ட பின்னர், அதை மேலும் அதனை மாற்றியமைக்க மாநில அரசுக்கு அதிகாரம் உண்டா என்பது இதில் முக்கியமான கேள்வியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
புது வருடத்தை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத்தரம் கொண்ட கற்கைநெறிகள்
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
(C-7169)
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
EVENING & WEEKEND CLASSES
Batch1 26.04.2014 @10.00pm
Batch2 28.04.2014 @4.00pm
Batch3 03.05.2014 @10.00pm
Batch4 05.05.2014 @4.00pm
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

வேலையாள் தேவை
KKK Apparel No.134, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
மேற்குறிப்பிட்ட ஆடைத் தொழிற்சாலைக்கு கீழ்க்காணும் தகைமை உடையவர்கள் தேவை.
❖ தையல் அனுபவமுள்ள பெண்கள். (வயது 18-30)
❖ கணக்காளர் - கணனி அனுபவமுள்ளவர்.
❖ பஸ் சாரதி
தொடர்பு: 0776692184
விண்ணப்பம் 29.04.2014 இற்கு முன் ஏற்கப்படும் அல்லது 30.04.2014 காலை 10 மணிக்கு மேற்படி முகவரியில் நேர்முகத் தேர்வு நடைபெறும்.
(சி-7175)

Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
✶ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
✶ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
✶ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
✶ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-7170)
Vivekananda Academy அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0212216928, 0774842464 ,0212220393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.